www.Padasalai.Net www.CBSEtips.in

திருச்சிலுவை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம் - 636014.

# பத்தாம் வகுப்பு

# தமிழ் பயிற்சி கையேடு





Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# திருச்சிலுவை மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சேலம் - 636 014.

**10 ஆம் வகுப்பு தமிழ்**

## 1 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## இயல் - 1

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது --------------------.
   **(அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**
   (ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   (இ) ஐம்பெரும் காப்பியங்களும் அகணிகலன்களும்
2. <u>**காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்**</u> நிலத்துக்கு நல்ல உரங்கள். - இத்தொடரில் அடிகோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
   (அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்
   (இ) தாளும் ஓலையும் **(ஈ) சருகும் சண்டும்**
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ------.
   (அ) எந் + தமிழ் + நா (ஆ) எந்த + தமிழ் + நா
   **(இ) எம் + தமிழ் + நா** (ஈ) எந்தம் + தமிழ் + நா
4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -------------.
   (அ) பாடிய ; கேட்டவர் (ஆ) பாடல் ; பாடிய
   (இ) கேட்டவர் ; பாடிய **(ஈ) பாடல் ; கேட்டவர்**
5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -------------.
   (அ) குலை வகை **(ஆ) மணி வகை**
   (இ) கொழுந்து வகை (ஈ) இலை வகை

**இப்பாடலைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு (17, 18, 19, 20) விடை தருக :**

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்க்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

**வினாக்கள் :**

6. இப்பாடல் இடம் பெற்ற நூல் -------------.
   **(அ) தனிப்பாடல் திரட்டு** (ஆ) கனிச்சாறு
   (இ) இரட்டுறமொழிதல் (ஈ) செல்லாய்வுக் கட்டுரைகள்
7. இப்பாடலின் ஆசிரியர் பெயர் -----------------.
   (அ) துரை. மாணிக்கம் **(ஆ) சண்முகசுந்தரம்**
   (இ) பாவாணர் (ஈ) பாவேந்தர்
8. 'ஆழி' என்பதன் பொருள்
   (அ) ஆறு **(ஆ) கடல்** (இ) ஊற்று (ஈ) கிணறு
9. முத்தமிழ் - பிரித்து எழுதுக.
   (அ) முத்து + தமிழ் (ஆ) முத் + தமிழ்
   **(இ) மூன்று + தமிழ்** (ஈ) மூ + தமிழ்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# இயல் - 2

1. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
(அ) உருவகம், எதுகை **(ஆ) மோனை, எதுகை**
(இ) முரண், இயைபு (ஈ) உவமை, எதுகை

2. **செய்தி** 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி** 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
**செய்தி** 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள் !
(அ) செய்தி 1 மட்டும் சரி (ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
(இ) செய்தி 3 மட்டும் சரி **(ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

3. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
**(அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**
(ஆ) கடல் நிர் குளிர்ச்சி அடைதல்
(இ) கடல் நீர் ஒலித்தல்
(ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. <u>**பெரிய**</u> <u>**மீசை**</u> <u>**சிரித்தார்**</u> - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
(அ) பண்புத்தொகை (ஆ) உவமைத்தொகை
**(இ) அன்மொழித்தொகை** (ஈ) உம்மைத்தொகை

5. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**
(அ) கொண்டல் - 1. மேற்கு
(ஆ) கோடை - 2. தேற்கு
(இ) வாடை - 3. கிழக்கு
(ஈ) தென்றல் - 4. வடக்கு
(அ) 1, 2, 3, 4 **(ஆ) 3, 1, 4, 2**
(இ) 4, 3, 2, 1 (ஈ) 3, 4, 1, 2

# இயல் - 3

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் -------------.
(அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலக்கு இடமுண்டு
(ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
**(இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு**
(ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

2. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது --------------------.
(அ) புத்தூர் (ஆ) மூதூர்
(இ) பேரூர் **(ஈ) சிற்றூர்**

3. அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
**(அ) வேற்றுமை உருபு** (ஆ) எழுவாய்
(இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. காசிக்காண்டம் என்பது -------------.
(அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
**(ஆ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**
(இ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
(ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

5. ‘விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -----------------.
(அ) நிலத்திற்கேற்ற விருந்து **(ஆ) இன்மையிலும் விருந்து**
(இ) அல்லிலும் விருந்து (ஈ) உற்றாரின் விருந்து

## இயல் - 4

1. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ – யாரிடம் யார் கூறியது?
(அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
**(ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**
(இ) மருத்துவரிடம் நோயாளி
(ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.
**(அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.**
(ஆ) குறிப்புகளுக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
(இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
(ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கும்?
(அ) வானத்தையும் பாட்டையும்
(ஆ) வானத்தையும் புகழையும்
(இ) வானத்தையும் பூமியையும்
**(ஈ) வானத்தையும் பேரொலியையும்**

4. குலசேகர ஆழ்வார் ‘வித்துவக்கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே –
(அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
(ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
**(இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**
(ஈ) கால வழுமைதி, இட வழுவமைதி

5. பாரத் ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
(அ) துலா (ஆ) சீலா (இ) குலா **(ஈ) இலா**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# இயல் - 5

1. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
   **(அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**
   (ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   (இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   (ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
2. அருந்துணை என்பதைப் பிரித்தால் ------------.
   **(அ) அருமை + துணை** (ஆ) அரு + துணை
   (இ) அருமை + இணை (ஈ) அரு + இணை
3. 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை' – என்று இவ்வடிகளில் குறிப்பிடுவது யாது?
   (அ) தமிழ் (ஆ) அறிவியல்
   **(இ) கல்வி** (ஈ) இலக்கியம்
4. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் - இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் -
   (அ) அமைச்சர், மன்னன் (ஆ) அமைச்சர், இறைவன்
   (இ) இறைவன், மன்னன் **(ஈ) மன்னன், இறைவன்**
5. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது ---------- வினா.
   'அதோ, அங்கே நிற்கும்' – என்று மற்றொருவர் கூறியது ----------- விடை.
   (அ) ஐயவினா, வினா எதிர்வினாதல்
   (ஆ) அறிவினா, மறை விடை
   **(இ) அறியா வினா, சுட்டு விடை**
   (ஈ) கொளல் வினா, இனமொழி விடை

# இயல் - 6

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ------------.
   (அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   (ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   **(இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**
   (ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். - இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?
   (அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
   (ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   **(இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.**
   (ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றன.
3. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
   (அ) அள்ளி முகர்ந்தால் **(ஆ) தளரப் பிணைத்தால்**
   (இ) இறுக்கி முடிச்சிட்டால் (ஈ) காம்பு முறிந்தால்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். - இத்தொடருக்கான வினா எது?
   (அ) கரகாட்டம் என்றால் என்ன?
   (ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
   (இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை?
   **(ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**
5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   (அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்.
   (ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்.
   (இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்.
   **(ஈ) அங்கு வறுமை இல்லாததால்.**

## இயல் - 7

1. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க :
   (அ) உழவு, மண், ஏர், மாடு (ஆ) மண், மாடு, ஏர், உழவு
   **(இ) உழவு, ஏர், மண், மாடு** (ஈ) ஏர், உழவு, மாடு, மண்
2. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவனை முறையே -------------.
   **(அ) திருப்பதியும் திருத்தணியும்** (ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   (இ) திருப்பதியும் திருச்செந்தூரும் (ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
3. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -----------.
   (அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
   (ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   (இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
   **(ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**
4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் -------------------.
   (அ) நாட்டைக் கைப்பற்றல் (ஆ) ஆநிரை கவர்தல்
   **(இ) வலிமையை நிலைநாட்டல்** (ஈ) கோட்டையை முற்றுகையிடல்
5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ---------.
   (அ) திருக்குறள் (ஆ) புறநானூறு
   (இ) கம்பராமாயணம் **(ஈ) சிலப்பதிகாரம்**

## இயல் - 8

1. மேன்மை தரும் அறம் என்பது ----------------.
   **(அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**
   (ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   (இ) புகழ் கருதி அறம் செய்வது
   (ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
2. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது -----------.
   (அ) காலம் மாறுவதை
   (ஆ) வீட்டைத் துடைப்பதை
   **(இ) இடையறாது அறப்பணி செய்தலை**
   (ஈ) வண்ணம் பூசுவதை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் --------------.

(அ) உதியன் ; சேரலாதன்

**(ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்**

(இ) பேகன் ; கிள்ளிவளவன்

(ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

4. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் -------------.

**(அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

(ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

(இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

(ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5. சிலப்பதிகாரத்தலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் -------------.

**(அ) அகவற்பா** (ஆ) வெண்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

## இயல் - 9

1. 'இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்' …. - இவ்வடிகளில் கற்காலம் என்பது ----.

(அ) தலைவிதி (ஆ) பழைய காலம்

(இ) ஏழ்மை **(ஈ) தலையில் கல் சுமப்பது**

2. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது -------------.

(அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

**(ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

(இ) அறிவியல் முன்னேற்றம்

(ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க ---------------, ------------ வேண்டினார்.

**(அ) கருணையன் எலிசபெத்துக்காக**

(ஆ) எலிசபெத் தமக்காக

(இ) கருணையன் பூக்களுக்காக

(ஈ) எலிசபெத் பூமிக்காக

4. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ----------.

(அ) உவமை (ஆ) தற்குறிப்பேற்றம்

**(இ) உருவகம்** (ஈ) தீவகம்

5. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது.

(அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

**(ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

(இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

(ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**********



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# 2 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## இயல் - 1

10. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
    - வேங்கை - புலி, மரம் - தனிமொழி
    - வேம் + கை- வேகின்றகை - தொடர்மொழி
    - வேங்கை என்பது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக அமைந்ததால் இது பொதுமொழியாகும்.

11. 'மன்னும் சிலம்பே ! மணிமே கலைவடிவே !
    இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
    சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

12. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
    மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.
    **சரியான தொடர்கள் :**
    ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
    **தவறான தொடர் :**
    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
    **பிழைக்கான காரணம் :**
    ஒரு தாற்றில்தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும், எனவே 'ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன' என்னும் தொடர் தவறாகும்.

13. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
    வடுக்காண் வற்றாகும் கீழ்' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.
    உடுப்பதூஉம், உண்பதூஉம் - இன்னிசை அளபெடை
    **இலக்கணம் :**
    செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

14. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
    காலைநேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர் வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர், அப்போது கி.வா.ஜ. 'அடடே காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே' என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

15. இரட்டுறமொழிதல் என்றால் என்ன?
ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுறமொழிதல் அல்லது சிலேடை எனப்படும்.

16. தமிழ்நாட்டு நெல் வகைகள் யாவை?
செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டு, கார் போன்றவை தமிழ்நாட்டின் நெல் வகைகள் ஆகும்.

## இயல் - 2

1. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.
'மரங்களை வளர்ப்போம் தூய காற்றைப் பெற்றிடுவோம்'.
'மரங்கள் தருதே காற்று மனிதா நீயும் போற்று'.

2. வசன கவிதை – குறிப்பு வரைக.
உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக்கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படுகிறது.

3. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
தண்ணீர்குடி - வேற்றுமைத் தொகை
இராமன் தண்ணீரைக் குடித்தான்
தயிர்க்குடம் - வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
அம்மா தயிர்க்குடம் எடுத்து வந்தார்.

4. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
மாஅல் - திருமால் (பொருள்)
இலக்கணக்குறிப்பு - இசைநிறை அளபெடை

5. காற்றின் பெயர்கள் சிலவற்றை எழுதுக.
காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி

## இயல் - 3

1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
   - விருந்தினராக வந்தவரை வியந்துரைத்தல்
   - நல்சொற்களைப் பேசுதல்
   - முகமலர்ச்சியுடன் பேசுதல்
   - எழுந்து நிற்றல்
   - அவருடன் தொடர்புடைய செய்திகளைக் கூறி மகிழச் செய்தல்
   - அவர் அருகிலேயே அமருதல்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

2. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
   செல்வம் இன்றியும் விருந்தோம்பல் செய்யலாம் என்பதையே இலக்கியச் செய்தி உணர்த்துகிறது. விருந்தோம்பல் செய்வதைத் தங்கள் கடமையாக எண்ணிச் செய்தால் செல்வம் இன்றியும் விருந்தோம்பல் செய்யலாம்.

3. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?
   'சிரித்துப் பேசினார்' என்பது 'சிரித்து சிரித்துப் பேசினார்' என உவகையின் காரணமாக அடுக்குத்தொடரானது.

4. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
   'தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்' என்பதே தொடர் உணர்த்தும் பொருளாகும்.

5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
   பாரதியார் கவிஞர் - பெயர்ப் பயனிலை
   நூலகம் சென்றார் - வினைப் பயனிலை
   அவர் யார்? - வினாப் பயனிலை

6. '**நச்சப்படாதவன்**' செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்டச் சொல்லுக்குப் பொருள் தருக.
   'பிறருக்கு உதவி, செய்யாததால் ஒருவராலும் விருப்பப்படாதவர்' என்பதே பொருள் ஆகும்.

7. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.
   கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இதில் பயின்று வருவது இன்னிசை அளபெடை ஆகும்.

8. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக :

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாக பேணிக் காக்கப்படும். | உயிரினும் ஓம்பப்படும். |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று. |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

9. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எழுதுக?
(அ) **கூவிளம் தேமா மலர்** (ஆ) கூவிளம் புளிமா நாள்
(இ) தேமா புளிமா காசு (ஈ) புளிமா தேமா பிறப்பு

## இயல் - 4

1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
   - வீட்டின் காவலன்
   - வாகன ஓட்டுநர்

2. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
   'செல்வேன்' எனல் வேண்டும் 'செல்கிறேன்' என உறுதித் தன்மையால் நிகழ்காலத்தில் கூறுவதால் இது கால வழுவமைதியாகும்.

3. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
   மருத்துவத்தில் நோயாளி மருத்துவரின் மீது கொண்ட நம்பிக்கையும், மருத்துவர் நோயாளி மீது வைக்கும் அன்பும் விரைவில் நோயை குணமாக்க உதவுகிறது.

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
   காற்று, வானம், நெருப்பு, நீர், நிலம்

5. 'சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான் - புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.
   கேட்பான் - கேட்கும்
   கத்துவான் - கத்தும்
   கடிக்க மாட்டான் - கடிக்காது
   அஃறிணையை உயர்திணையாகக் கருதப்படுகிறது.

6. இலா – குறிப்பு தருக.
   - இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி இலா (ELA – Electronic Live Assistant) என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.
   - ஒரு வினாக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

7. பெருமாள் திருமொழி – நூல் குறிப்புத் தருக.
- நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் ஐந்தாம் திருமொழியாகப் பெருமாள் திருமொழி இடம் பெற்றுள்ளது.
- இதில் 105 பாடல்கள் உள்ளன.
- இதனைப் பாடியவர் குலசேகராழ்வார்.

8. குலசேகராழ்வார் யாரை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்?
- வித்துவக்கோடு என்னும் ஊர், கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.
- குலசேகராழ்வார் அங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

9. வழு, வழாநிலை, வழுவமைதி – விளக்குக.
- **வழு** : இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
- **வழாநிலை** : இலக்கணமுறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- **வழுவமைதி** : இலக்கணமுறையின்றி பிழையுடையது எனினும் ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி பிழையன்று என ஏற்றுக்கொள்ளப் படுவது வழுவமைதி ஆகும்.

10. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
- வழுவமைதி ஐந்து வகைப்படும். அவை :
- திணை வழுவமைதி
- பால் வழுவமைதி
- இட வழுவமைதி
- கால வழுவமைதி
- மரபு வழுவமைதி

## இயல் - 5

1. ‘கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு
முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பெழிந்த பெரும்
காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன்
தென் சொல்’ - இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்?
காதல்மிகு கேண்மையினான் யார்?
கழிந்த பெரும் கேள்வியினான் - பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேலபாண்டியன்.
காதல்மிகு கேண்மையினான் - இடைக்காடனார் என்னும் புலவர்.

2. செய்குதம்பிப்பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
- அருளினைப் பெருக்குவோம் !
- அறிவைத் திருத்திச் சீராக்குவோம் !
- மயக்கம் அகற்றுவோம் !



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

- அறிவுக்குத் தெளிவு தருவோம் !
- உயிருக்கு அரிய துணை கல்வியே !
- கல்வியைப் போற்றிக் காப்போம் !

3. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | | |
|---|---|---|
| அமர்ந்தான் | - | அமர் + த்(ந்) + த் + ஆன் |
| அமர் | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி ந் ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| ஆன் | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |

4. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
   - நான் விரும்பும் மொழி ஹிந்தி.
   - காரணம் : இந்தி தேசியமொழியாதலால் கற்றுக் கொள்ள விருப்பம்.

5. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ … இருக்கிறதே? சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே ! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
   - மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது?
     **அறியா வினா**
   - மின்சாரம் இருக்கிறதா? இல்லையா?
     **ஐய வினா**

6. சதாவதானம் என்றால் என்ன?
   - ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

7. மன்னன் இடைக்காடனாருக்கு செய்த சிறப்பு என்ன?
   - மன்னன் மாளிகையில், அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனைச் செய்து வான் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

8. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   - வினா ஆறு வகைப்படும்.
     அவை :
   - அறிவினா
   - அறியா வினா
   - ஐய வினா



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

- கொளல் வினா
- கொடை வினா
- ஏவல் வினா

9. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   - விடை எட்டு வகைப்படும்.
     அவை :
   - சுட்டு விடை
   - மறை விடை
   - நேர் விடை
   - ஏவல் விடை
   - வினா எதிர் வினாதல் விடை
   - உற்றது உரைத்தல் விடை
   - உறுவது கூறல் விடை
   - இனமொழி விடை

10. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
    - செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் 'பொருள்கோள்' என்று பெயர்.
    - பொருள்கோள் எட்டு வகைப்படும் :
      அவை :
    - ஆற்றுநீர்ப் பொருள்கோள்
    - மொழிமாற்றுப் பொருள்கோள்
    - நிரல்நிறைப் பொருள்கோள்
    - விற்பூட்டுப் பொருள்கோள்
    - தாப்பிசைப் பொருள்கோள்
    - அளைமறியாப்புப் பொருள்கோள்
    - கொண்டுகூட்டுப் பொருள்கோள்
    - அடிமறிமாற்றுப் பொருள்கோள்

## இயல் - 6

1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
   - **முதற்பொருள் :**
     நிலம் - முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
     பொழுது - பெரும்பொழுது - கார்காலம் (மழைக்காலம்)
     சிறுபொழுது - மாலை
   - **கருப்பொருள் :**
     உணவு - வரகு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

2. நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன் ! என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
   - முந்தைய நாள் தான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

3. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
   - உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது.
   - காலனுக்குத் தூதரனவர் கையில் இனிப்படுத்து உறங்குவாய் என்று கும்பகருனனை எழுப்புகிறார்கள்.

4. சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
   - அமைதியான முறையில் இவ்வுலகைத் தாங்கி நிறுத்த போராடும் பெண்களைக் குறிக்கிறது.

5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
   (அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
   (ஆ) முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

   (அ) குறவர்கள் மலையில் உழுதனர்.
   (ஆ) நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

## திருக்குறள்

**குறுவினா (பாடநூல் வினாக்கள்)**

6. 'கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின்பொருள் கூறுக.
   - தன்னிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லார் என்பதாகும்.

7. தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| தஞ்/சம் | நேர் நேர் | தேமா |
| எளி/யர் | நிரை நேர் | புளிமா |
| பகைக் /கு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

8. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?
   - இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

9. பின்வருவனவற்றுள் கூரான ஆயதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
**(பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்)**
   - உழைத்ததனால் கிடைத்த ஊதியமே கூரான ஆயுதம்.
   - காரணம் : இதுவே பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம்.

10. செங்கீரைப் பருவம் - விளக்குக.
   - செங்கீரைக்கொடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.

11. பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் யாவை?
   - பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் பத்து. அவை :
   - ஆண்பாற் பிள்ளைத்தமிழ் : சிற்றில், சிறுபறை, சிறுதேர்
   - பெண்பாற் பிள்ளைத்தமிழ் : கழங்கு, அம்மானை, ஊசல்
   - இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் :
     காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி

12. கம்பராமாயணம் - நூல் குறிப்பு.
   - இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.
   - கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் ‘இராமாவதாரம்’.
   - ஆறு காண்டங்களைக் கொண்டது.

13. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை எனக் கம்பர் எடுத்துரைக்கிறார்?
   - கொடை இல்லை.
   - போர் இல்லை.
   - பொய்மொழி இல்லை.
   - அறியாமை இல்லை.

14. அன்பின் ஐந்திணைகள் யாவை?
   - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

15. முதற்பொருள் என்பது யாது?
   - ஒவ்வொரு திணையின் நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

16. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- பொழுது இரு வகைப்படும்.
  அவை :
- பெரும்பொழுது
- சிறுபொழுது

17. கருப்பொருள் என்றால் என்ன?

- அந்தந்த நிலத்தின் தெய்வம், மக்கள், உணவு, தொழில், யாழ், பண், பறவை போன்ற பதினான்கு பொருட்களும் கருப்பொருள்கள் ஆகும்.

## இயல் - 7

1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

- பாசவர் - வெற்றிலை விற்பவர்
- வாசவர் - ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள்கள் விற்பவர்
- பல்நிண விலைஞர்- பலவகையான இறைச்சிகள் விற்பவர்
- உமணர் - வெண்மையான உப்பு விற்கும் வணிகர்

2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

- மன்னரது வரலாறு, பெருமை முதலான செய்திகள் காலம் காடந்து நிலைக்க வேண்டும் என்பதே மெய்க்கீர்த்தியின் நோக்கம் ஆகும்.

3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

- வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று புத்தகங்கள் வாங்கிப் படித்தார்.
- உணவுக்காக வைத்திருந்த பணத்தில் புத்தகங்கள் வாங்கிவிட்டு பல வேளைகளில் பட்டினி கிடப்பார்.

4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

- வெட்சி x கரந்தை
- வஞ்சி x காஞ்சி
- நொச்சி x உழிஞை

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச்சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

“பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்”. - ம.பொ.சி.

6. உரைப்பாட்டு மடை - விளக்குக.

- உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

7. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- புறத்திணைகள் 12 வகைப்படும்.
  அவை :
- வெட்சித் திணை
- கரந்தைத் திணை
- வஞ்சித் திணை
- காஞ்சித் திணை
- நொச்சித் திணை
- உழிஞைத் திணை
- தும்பைத் திணை
- வாகைத் திணை
- பாடாண் திணை
- கைக்கிளை திணை
- பெருந்திணை
- பொதுவியல் திணை

## இயல் - 8

1. ‘கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க !
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது’
(அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.
(ஆ) **இலக்கணக் குறிப்பு எழுதுக :** கொள்க, குரைக்க

(அ) அடி எதுகை : கொ<u>**ள்**</u>வோர் - உ<u>**ள்**</u>வாய்
(ஆ) கொள்க, குரைக்க - வியங்கோள் வினைமுற்று

2. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

- வெண்பாவின் பொது இலக்கணம் அமையப் பெற்று முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும்பெற்று இரண்டு அடிகளாய் வருவது குறள் வெண்பா.
- எ.கா.
  உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
  கல்லார் அறிவிலா தார்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. குறிப்பு வரைக : அவையம்
   - அறம் கூறும் மன்றங்கள் அவையம்.
   - அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
   - அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என புறநானூறு குறிப்பிடுகின்றது.

4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
   - காலக் கழுதை கட்டெறும்பானதும் மீண்டும் தன் பணிகளைத் தொடங்கினார்.
   - வாளித் தண்ணீர் எடுத்து ஜன்னலைக் கழுவினார்.
   - துணிகளைக் கொண்டு சன்னலைத் துடைத்துத் தூய்மைப்படுத்தினார்.
   - சாயக் குவளையில் வர்ணத்தை நிரப்பி, கட்டைத் தூரிகை கொண்டு அலங்காரப்படுத்தினார்.

5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. - இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.
   - வஞ்சிப்பாவிற்கு தூங்கல் ஓசையும், கலிப்பாவிற்கு துள்ளல் ஓசையும் உரிய ஓசைகளாகும்.

6. யாப்பின் உறுப்புகள் யாவை?
   - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறும் யாப்பின் உறுப்புகள் ஆகும்.

7. நால்வகைப் பாக்களுக்குரிய ஓசைகளை எழுதுக.
   - வெண்பா - செப்பல் ஓசை
   - ஆசிரியப்பா (அகவற்பா) - அகவல் ஓசை
   - கலிப்பா - துள்ளல் ஓசை
   - வஞ்சிப்பா - தூங்கல் ஓசை

## இயல் - 9

1. தீவக அணியின் வகைகள் யாவை?
   - தீவக அணி மூன்று வகைப்படும். அவை :
   - முதல்நிலைத் தீவகம்
   - இடைநிலைத் தீவகம்
   - கடைநிலைத் தீவகம்

2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
   - நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு.
   - நான் எழுதக்காரணமான தூண்டுதலுக்கு ஒரு காரணமும் உண்டு.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. 'காய்மணி யாகுமுன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?
    - இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே வாடிக் காய்ந்துவிட்டதைப் போல, கருணையன் தாயை இழந்து வாடினான்.

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
    - இக்குறளில் அமைந்துள்ள அணி நிரல்நிறை அணி ஆகும்.
    - சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படி இணைத்துப்பொருள் கொள்வது நிரல் நிறை அணி ஆகும்.

5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
    - 'தலைக்கனமே வாழ்வு' என சித்தாளுவின் வாழ்வைக் குறிப்பிடுகிறார்.
    - 'அடுத்தவேளை உணவுக்காக அடுக்குமாடி கட்டிடம் எதுவாயினும் செங்கற்களை தலையில் சுமந்து செல்லும் சித்தாளுக்கு தலைக்கனமே வாழ்வாகிப்போனது' என நாகூர் ரூமி குறிப்பிடுகிறார்.

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

## இயல் - 1

**1. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக :**

'தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
    தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
    ஓதி யுனர்ந்தின் புருவோமே'

**விடை :**

'தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை
    தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம்
    ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே'

**2. கீழ்க்காணும் சொற்களின் கூட்டுப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக:**

குவியல், குலை, மந்தை, கட்டு

- கல் - குவியல்
- புல் - கட்டு
- பழம் - குலை
- ஆடு - மந்தை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**3. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக :**

(1) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

- கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருப்பரை அழைத்து வாருங்கள்.

(2) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

- ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

(3) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

- நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

(4) பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித்தேர்வில் வென்றார்.

- பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

**4. தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக :**

(1) **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனியி**ருக்கக் காய் **புசித்த**லைப்போல், இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.

- **பூமியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழமி**ருக்கக் காய் **உண்ணுவ**தைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **துன்ப**ப்படுகின்றனர்.

(2) வள்ளல் குமணன் **வறுமையால்** வாழவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.

- வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாழவந்த **கவிஞனுக்குத்** தனது தலையைக் **தந்து** மங்காதச் **சிறப்பைப்** பெற்றான்.

(3) நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் **மழைமுகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.

- நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் **மழைமேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

(4) **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.

- **பூங்காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேன்** உண்டன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(5) **<u>பசு</u>**ப்போல் **<u>சாந்தமும்</u>** **<u>புலி</u>**போல் **<u>தீரமும்</u>** **<u>யானை</u>** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

- **<u>ஆவி</u>**னைப்போல் **<u>அமைதியும்</u>** **<u>வேங்கை</u>**யைப் போல் **<u>வீரமும்</u>** **<u>களிறு</u>** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**5. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக :**

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

- தேன்மழை, விண்விளக்கு, மணிமேகலை, வான்செய், வான்மழை, பொன்விலங்கு, பூமணி.

**6. குறிப்புகளைக்கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்களை அமைக்க :**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறை நாள்.

(1) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
(2) சுவைக்காத இளநீர் தென்னையில் உண்டா?
(3) தமிழின் பெருமைக்கு காப்பியச் சுவைமிக்க நூல்கள் எடுத்துக்காட்டாகுமா?
(4) மனிதகுல மேன்மைக்கு எது சிறந்தது?
(5) ஞாயிறு விடுமுறை நாளா?

**7. எண்ணுப் பெயர்களை கண்டு தமிழ் எண்களில் எழுதுக :**

| வ.எண். | செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1. | நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| 2. | எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| 3. | ஐந்து சால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| 4. | நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| 5. | ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

## இயல் - 2

**சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க :**

1. இன்சொல் - பண்புத்தொகை -
   இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

2. எழுகதிர் - வினைத்தொகை -
   விடியற்காலை கன்னியாக்குமரி கடலில் எழுகதிரைக் கண்டேன்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. கீரிபாம்பு - உம்மைத்தொகை -
   கீரியும் பாம்பும் சண்டையிட்டன.

4. பூங்குழல் வந்தாள் - அன்மொழித்தொகை -
   கண்ணகியின் கூந்தலைப் பார்த்து பூங்குழல் வந்தாள் எனப் பேசினர்.

5. மலைவாழ்வார் - வேற்றுமைத்தொகை
   மழையில் வாழ்பவர்களை குறிஞ்சி நில மக்கள் என்று கூறுவர்.

6. முத்துப்பல் - உவமைத்தொகை -
   காவியா முத்துப்பல் வரிசை உடையவள்.

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க :**

**(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)**

7. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும். நீக்காவிட்டாலும் வாசனை தரும். **(நறுமணம்)**
8. பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும். **(புதுமை)**
9. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை. **(காற்று)**
10. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும். **(விண்மீன்)**
11. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தின் வனம். **(காடு)**

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக :**

**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.
   **காற்றின் பாடல்**

2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது. அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.
   **மொட்டின் வருகை**

3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல். பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.
   **மிதக்கும் வாசம்**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம், மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சுவிடும், கசகசத்த உயிரினங்கள்.
**உயிர்ப்பின் ஏக்கம்**

5. நின்றுவிட்ட மழை தரும் குளிர், சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்ப்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.
**நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை ; புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும் இலையின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.
**வனத்தின் நடனம்**

## இயல் - 3

**1. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர்வகைகளை எடுத்து எழுதுக :**

மாடியிலிருந்து **இறங்கினார் முகமது**. **அவர் பாடகர்** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந்தகடுகளை **அடுக்கு அடுக்காக** வைத்திருப்பார்.

**விடை :**

| | | |
|---|---|---|
| இறங்கினார் முகமது | - | வினைமுற்றுத் தொடர் |
| அவர் பாடகர் | - | எழுவாய்த் தொடர் |
| பாடுவதும் கேட்பதும் | - | எண்ணும்மை |
| கேட்ட பாடல் | - | பெயரெச்சத் தொடர் |
| கேட்காத பாடல் | - | எதிர்மறைப் பெயரெச்சத் தொடர் |
| அடுக்கு அடுக்காக | - | அடுக்குத் தொடர் |

**2. வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக :**

| | | |
|---|---|---|
| (1) **பழகப் பழகப்** பாலும் புளிக்கும் | - | அடுக்குத் தொடர் |
| (2) **வந்தார் கண்ணன்** | - | வினைமுற்றுத் தொடர் |
| (3) **வடித்த கஞ்சியில்** சீலையை அலசினேன் | - | பெயரெச்சத் தொடர் |
| (4) அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது | - | வேற்றுமைத் தொடர் |
| (5) மேடையில் **நன்றாகப் பேசினான்** | - | வேற்றுமைத் தொடர் |

**3. பழமொழிகளை நிறைவு செய்க :**

(1) உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**.
(2) ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**.
(3) உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**.
(4) விருந்தும் **மருந்தும் மூன்றே நாள்**.
(5) அளவுக்கு **மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு**.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**4. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க :**

இறகு (பறவையிடம் இருப்பது)
குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
வாள் (மன்னரிடம் இருக்கும்)
அக்கா (தங்கைக்கு மூத்தவள்)
மதி (அறிவின் மறுபெயர்)
படகு (நீரில் செல்வது)

**விடை :**
நூலின் பெயர் திருக்குறள்

**5. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக :**

சிலை – சீலை.
**சிலை**யைத் திரைச்**சீலை**யால் மறைத்திருக்கிறார்கள்.

தொடு – தோடு.
என் காதைத் **தொடு**கின்ற **தோடு** அழகானது.

மடு – மாடு.
**மடு** அருகில் **மாடு** மேய்ந்தது.

மலை – மாலை.
**மலை**யில் ஏறி **மாலை** அணிவித்தான்.

வளி – வாளி
**வளி** மிகுந்ததால் **வாளி** பறந்தது.

விடு – வீடு
என்னை **விடு** **வீடு** செல்லவேண்டும்.

**6. அகராதியில் கண்டு பொருள் எழுதுக :**

(அ) ஊண் - உணவு
ஊன் - இறைச்சி (தசை) , உடல்

(ஆ) திணை - ஒழுக்கம், இடம், நிலம், பகுப்பு, குலம்
தினை - சிறுதானியங்களில் ஒரு வகை

(இ) அண்ணம் - மேல்வாய்ப்புறம்
அன்னம் - சோறு, பறவை

(ஈ) வெல்லம் - இனிப்புப் பொருள்
வெள்ளம் - நீர் பெருக்கு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# இயல் - 4

1. **கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக :**

(அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். **(கால வழுவமைதி)**

(ஆ) 'இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்' என்று கூறினார். **(இட வழுவமைதி)**

(இ) சிறிய வயதில் இந்த மரத்தில் தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம். **(கால வழுவமைதி)**

(ஈ) செல்வன் இளவேலன் இந்தச் சிறு வயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். **(பால் வழுவமைதி)**

2. **அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக :**

(அ) தந்தை, 'மகனே ! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா?' என்று சொன்னார். **(ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)**

**விடை :** தாய், 'மகளே ! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா?' என்று சொன்னார்.

(ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. **(வழுவை வழாநிலையாக மாற்றுக)**

**விடை :** அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்.

(இ) 'இதோ முடித்துவிடுவேன்' என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். **(வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)**

**விடை :** 'இதோ முடித்துவிட்டேன்' என்று செயலை முடிக்கும் முன்னர்க் கூறினார்.

(ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. **(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையை தன்மையாக, தன்மையை படர்க்கையாக மாற்றுக)**

**விடை :** நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

(உ) குழந்தை அழுகிறான் பார். **(வழுவை வழாநிலையாக மாற்றுக)**

**விடை :** குழந்தை அழுகிறது பார்.

3. **வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக :**

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?
எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும் பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல், உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம். யுரேகா ! யுரேகா ! – அறிவியல் வெளியீடு.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**விடை :** எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றுபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல், உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும் சுவைத்தல் உணர்வு__குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

**4. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :**

(அ) **இயற்கை - செயற்கை :**
பாதை தெரியாத **இயற்கைக்** காடுகளில் பயணிக்கச் **செயற்கைக்** கருவிகள் பயன்படுகின்றன.

(ஆ) **கொடு - கோடு :**
ராஜா எழுதுகோள் **கொடு**த்ததால் நான் **கோடு** போட்டேன்.

(இ) **கொள் - கோள் :**
தெரிந்து **கொள்** பூமியும் ஒரு **கோள்** தான்.

(ஈ) **சிறு - சீறு :**
**சிறு**க சிறுக கல்வி கற்றால் எதிர்காலத்தில் **சீறு** நடைபோடலாம்.

(உ) **தான் - தாம் :**
**தான்** கற்ற கல்வியை எல்லாருக்கும் **தாம்** பயன்படுத்த வேண்டும்.

(ஊ) **விதி - வீதி :**
சாலை **விதி**களை மதித்து **வீதி**யில் செல்ல வேண்டும்.

**5. பத்தியைப் படித்துப் பதில் தருக :**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**வினாக்கள் :**

(1) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
**மீண்டும் மீண்டும்.**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(2) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கிறயது?
**தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.**

(3) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
**பெய் மழை - வினைத்தொகை**

(4) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
**நீருக்கும் ஆற்றல் உண்டு.**

(5) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவீர் கருதுவன யாவை?
**நன்றாக மழை பெய்து நாடு வளமையாகத் திகழ வேண்டும். தூய காற்றும், தூய நன்னீரும் நாம் உயிர் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகும்.**

**6. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக :**
**(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)**
(1) நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **<u>கற்றல்</u>**.
(2) விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **<u>கரு</u>**.
(3) கல் சிலை ஆகுமெனில், நெல் **<u>சோறு</u>** ஆகும்.
(4) குரலில் இருப்பது பேச்சு எனில், விரலில் இருப்பது **<u>எழுத்து</u>**.
(5) மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது **<u>பூவில்</u>**.

**7. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக :**

| **குறிப்பு** | **எதிர்மறையான சொற்கள்** |
|---|---|
| 1. மீளாத் துயர் | மீண்ட இன்பம் |
| 2. கொடுத்துச் சிவந்த | கொடாது கருத்த |
| 3. மறைத்துக் காட்டு | திறந்து காட்டாதே |
| 4. அருகில் அமர்க | தொலைவில் எழுக |
| 5. பெரியவரின் அமைதி | சிறியவரின் ஆரவாரம் |
| 6. புயலுக்குப் பின் | அமைதிக்கு முன் |

**8. அகராதியில் காண்க :**
(1) அவிர்தல் - பிரகாசித்தல், ஒளிர்தல், விளங்குதல்
(2) அழல் - நெருப்பு, வெப்பம், விடம்
(3) உவா - முழுநிலா, முழு அமைவாசை, கடல், பருவகாலம், இளமை, யானை
(4) கங்குல் - இரவு, இடையாமம், பரணி நாள், இருள்
(5) கனலி - சூரியன், நெருப்பு, பன்றி

## இயல் - 5

1. வினா வகைகளையும் விடை வகைகளையும் சுட்டுக.
(அ) ‘காமராசர் நகர் எங்கே இருக்கிறது?’
இந்த வழியாகச் செல்லுங்கள்’ - என்று விடையளிப்பது.
காமராசர் நகர் எங்கே இருக்கிறது? - **அறியா வினா**
இந்த வழியாகச் செல்லுங்கள் - **சுட்டு விடை**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(ஆ) ‘எனக்கு எழுதித் தருகிறாயா?’ என்ற வினாவுக்கு,
‘எனக்கு யார் எழுதித் தருவார்கள்?’ - என்று விடையளிப்பது.
எனக்கு எழுதித் தருகிறாயா? - **கொளல் வினா**
எனக்கு யார் எழுதித் தருவார்கள்? - **வினா எதிர் வினாதல் விடை**

2. உரையாடலில் இடம் பெற்றுள்ள வினா விடை வகைகளைக் கண்டு எழுதுக.

**பாமகள்** : வணக்கம் ஆதிரை ! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? - **அறியா வினா**

**ஆதிரை** : ஆமாம் ! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன் - **நேர் விடை**

**பாமகள்** : அப்படியா ! என்ன தலைப்பு? - **அறியா வினா**

**ஆதிரை** : கல்வியில் சிறக்கும் தமிழர் ! - **நேர் விடை**
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ! மாட்டீங்களோ? - **ஐய வினா**

**பாமகள்** : ஏன் வராமல்? - **வினா எதிர்வினாதல் விடை**

3. அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| **வ.எண்.** | **வேர்ச் சொல்** | **எழுவாய்த் தொடர்** |
|---|---|---|
| 1. | ஓடு | அருணா ஓடினாள் |
| 2. | சொல் | அம்மா சொன்னார் |
| 3. | தா | அரசர் தந்தார் |
| 4. | பார் | துளிர் பார்த்தாள் |
| 5. | வா | குழந்தை வந்தது |

| **வ.எண்.** | **பெயரெச்சத் தொடர்** | **வினையெச்சத் தொடர்** |
|---|---|---|
| 1. | ஓடிய அருணா | ஓடி வந்தாள் |
| 2. | சொன்ன அம்மா | சொல்லிச் சென்றார் |
| 3. | தந்த அரசர் | தந்து சென்றார் |
| 4. | பார்த்த துளிர் | பார்த்துச் சிரித்தாள் |
| 5. | வந்த குழந்தை | வந்து சென்றது |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

| வ.எண். | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|
| 1. | அருணா ஓடாதே | அருணாவிற்காக ஓடினாள் |
| 2. | அம்மா சொல் | கதையைச் சொன்னார் |
| 3. | அரசே தருக ! | அரசருக்குத் தந்தார் |
| 4. | துளிர் பார் | துளிருடன் பார்த்தேன் |
| 5. | குழந்தையே வா ! | குழந்தையோடு வந்தது |

4. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
   (1) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
   அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

   (2) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
   நிழல்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

   (3) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
   முறையான கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

   (4) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
   தனிமையான வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

   (5) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.
   பாடங்களைப் படித்து முடித்த குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

5. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.
   (1) நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **<u>புதையல்</u>** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **<u>புதைத்தல்</u>** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். **(புதையல், புதைத்தல்)**

   (2) காட்டு விலங்குகளைச் **<u>சுடுதல்</u>** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **<u>சுட்டல்</u>** திருத்த உதவுகிறது. **(சுட்டல், சுடுதல்)**

   (3) காற்றின் மெல்லிய **<u>தொடுதல்</u>** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **<u>தொடுத்தல்</u>** பூக்களை மாலையாக்குகிறது. **(தொடுத்தல், தொடுதல்)**

   (4) பசுமையான **<u>காட்சி</u>**ஐக் **<u>காணுதல்</u>** கண்ணுக்கு நல்லது. **(காணுதல், காட்சி)**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(5) பொதுவாழ்வில் **<u>நடித்தல்</u>** கூடாது **<u>நடிப்பி</u>**ல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. **(நடித்தல், நடிப்பு)**

6. அகராதியில் காண்க.

| | | |
|---|---|---|
| (1) மன்றல் | - | திருமணம், வாசனை, நெடுந்தெரு |
| (2) அடிச்சுவடு | - | காலடியின் அடையாளம், பாதம்படுமிடம், காற்சுவடு |
| (3) அகராதி | - | அகரவரிசைச் சொற்பொருள் நூல், சொற்பொருள் விளக்கம் |
| (4) தூவல் | - | தூவுதல், மழை, இறகு, தளிர் |
| (5) மருள் | - | மயக்கம், ஆவேசம், பேய், கற்றாமை |

## இயல் - 6

**I. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக :**

1. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். **(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)**
அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

2. இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்குகளில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். **(தொடர் சொற்றொடராக மாற்றுக)**
இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தி, அவற்றைப் புத்தக அடுக்குகளில் அடுக்கி வைத்து, கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். **(கலவைச் சொற்றொடராக மாற்றுக)**
கூத்துக் கலைஞர் பாடத்தொடங்கியவுடன் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

**4.** ஒயிலாட்டாத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். **(தனிச் சொற்றொடராக மாற்றுக)**
ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டனர். காலில் சலங்கை அணிந்து கொண்டனர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

5. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. **(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)**
ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**II. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களாக நிரப்புக:**

6. வானம் **கருக்கத்** தொடங்கியது மழைவரும்போலிருக்கிறது.
7. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **வெளுத்தது**.
8. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
9. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பசுமையான** புல்வெளிகளில் கதிரவனின் **செஞ்சுடர்** வெயில் பரவிக் கிடக்கிறது.
10. வெயிலில் அலையாதே ; உடல் **கருத்துவிடும்**.

**III. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக : (தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து)**

11. விரட்டாதீர்கள் - பறவைக்கு **மரம் வீடு**.
வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவைதரும் **மரவீடு**.

12. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**.
சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**.

13. மலை முகட்டில் மேகம் **தங்கும்** அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**.

14. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்.

15. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே **விருது** அதில் வரும்காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**.

**IV. அகராதியில் காண்க :**

16. தால் - நாக்கு
17. உழுவை - புலி, ஒருவகை மீன்
18. அகவுதல் - கரகரப்பான ஒலி எழுப்புதல், அழைத்தல்
19. ஏந்தெழில் - மிகுந்த அழகு, அரசன்
20. அணிமை - அண்மை, நெடுக்கம்

## இயல் - 7

**I. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க :**

1. வரப்போகிறேன் :
   - இன்னும் சிறிது நேரத்தில் **வரப்போகிறேன்**.

2. இல்லாமல் இருக்கிறது :
   - நேற்றிலிருந்து உறக்கம் **இல்லாமல் இருக்கிறேன்**.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. கொஞ்சம் அதிகம் :

- நேற்று வெயில் **கொஞ்சம் அதிகம்**.

4. முன்னுக்குப்பின் :

- நான் கேட்ட கேள்விக்கு **முன்னுக்குப்பின்** முரணாக பதில் அளித்தான்.

5. மறக்க நினைக்கிறேன் :

- என் வாழ்வில் எனக்கு நடந்த சோக நிகழ்வை **மறக்க நினைக்கிறேன்**.

## II. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக :

**மூவேந்தர்களால்** **நாற்றிசையும்** போற்றி வளர்க்கப்பட்ட **முத்தமிழே**, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள **இருதிணை** அமைப்பே காரணமாகும். **முப்பாலை** முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை **ஐந்திணைகளில்** அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். **நானிலத்தில்** பசித்தவர்க்கு **அறுசுவை** உணவுபோல் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை தந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

- மூவேந்தர் - மூன்று + வேந்தர்
  சேர, சோழ, பாண்டியர்
  மூன்று - ௩

- நாற்றிசை - நான்கு + திசை
  கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
  நான்கு - ௪

- முத்தமிழ் - மூன்று + தமிழ்
  இயல், இசை, நாடகம்
  மூன்று - ௩

- இரு திணை - இரண்டு + திணை
  உயர்திணை, அஃறிணை
  இரண்டு - ௨

- முப்பால் - மூன்று + பால்
  அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்
  மூன்று - ௩

- நானிலம் - நான்கு + நிலம்
  குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
  நான்கு - ௪



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

- ஐந்திணைகள் - ஐந்து + திணை
  குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
  ஐந்து - ரு

- அறுசுவை - ஆறு + சுவை
  இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு

- பத்துப்பாட்டு - பத்து + பாட்டு
  பத்து - கo

- எட்டுத்தொகை - எட்டு + தொகை
  எட்டு - அ

**III. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக :**

6. புதுக்கோட்டை - புதுகை
7. திருச்சிராப்பள்ளி - திருச்சி
8. உதகமண்டலம் - ஊட்டி (உதகை)
9. கோயம்புத்தூர் - கோவை
10. நாகப்பட்டினம் - நாகை
11. புதுச்சேரி - புதுவை
12. கும்பகோணம் - குடந்தை
13. திருநெல்வேலி - நெல்லை
14. மன்னார்குடி - மன்னை
15. மயிலாப்பூர் - மயிலை
16. சைதாப்பேட்டை - சைதை

**IV. அகராதியில் காண்க :**

17. மிரியல் - மிளகு
18. வருத்தனை - கூட்டுதல், பெருக்குதல் (இலக்கண வகையில் ஒன்று)
19. அதசி - சணல்
20. துரிஞ்சில் - வௌவால் (மரவணில்)

## இயல் - 8

**I. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக :**

**பேச்சு வழக்கு :**

1. 'தம்பீ எங்க நிக்கிறே?'
2. 'நீங்க சொன்ன எடத்துலதாண்ணே ! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.
3. 'அங்஑னக்குள்ளயே டீ சாட்டுட்டு, பேப்பரப் படிச்சிட்டு இரு … நா வெரசா வந்துருவேண்'
4. 'அண்ணே ! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே ! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு !'



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

5. ‘அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்.’
6. ‘ரொம்ப சின்ன வயசுல பார்த்ததுண்ணே ! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும் !’
7. ‘இப்ப ஒசரமா வளந்துட்டான் ! ஒனக்கு அடையாளமே தெரியாது ! ஊருக்கு எங்கூட வருவாம்பாரேன் ! சரி, போனை வயி, நாங் கெளம்பிட்டேன் …
8. சரிங்கண்ணே

**எழுத்து வழக்கு :**

1. ‘தம்பி ! எங்கு நிற்கிறாய்?’
2. ‘நீங்கள் சொல்லிய இடத்தில்தான் அண்ணா ! நான் நிற்கும் இடத்தின் எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது.
3. ஆங்கேயே தேநீர் பருகிவிட்டு செய்தித்தாளை படித்துக்கொண்டு இரு. நான் விரைவாக வந்துவிடுவேன்.’
4. அண்ணா ! சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் அண்ணா ! அவனைப் பார்த்தே நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.
5. அவன் தன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கின்றான். ஊருக்கு வரும்பொழுது அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்.
6. மிகவும் சிறிய வயதில் பார்த்தது அண்ணே ! அப்பொழுது அவனுக்கு மூன்று வயது இருக்கும்.
7. இப்பொழுது மிகவும் உயரமாக வளந்துவிட்டான். உனக்கு அடையாளமே தெரியாது ! ஊருக்கு வரும்பொழுது என்னுடன் வருவான் பார் ! சரி தொலைப்பேசியை வை நான் புறப்பட்டுவிட்டேன்.
8. சரி அண்ணே !

## II. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக :

**1. மனக்கோட்டை :**

உழைக்காமலேயே பணக்காரனாகலாம் என **மனக்கோட்டை** கட்டினான்.

**2. கண்ணும் கருத்தும் :**

கண்ணன் படிப்பதில் **கண்ணும் கருத்துமாக** இருந்ததால் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றான்.

**3. அள்ளி இறைத்தல் :**

குழந்தைகள் பூக்களை **அள்ளி இறைத்து** விளையாடினர்.

**4. ஆறப்போடுதல் :**

சினத்தை ‘**ஆறப்போடுதல்**’ அனைவருக்கும் நல்லது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**III. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக :**

1. **ஒன்று :**
   ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
   நன்றாகா(து) ஆகி விடும்.

2. **இரண்டு :**
   தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
   வானம் வழங்கா(து) எனின்.

3. **மூன்று :**
   காமம் வெகுளி மயக்கம்இவை மூன்றன்
   நாமம் கெடக்கெடும் நோய்.

4. **நான்கு :**
   அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
   எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு.

5. **ஐந்து :**
   பொறிவாயில் ஐந்தறிவித்தான் பொய்தீர் ஒழுக்க
   நெறிநின்றார் நீடுவாழ் வார்.

6. **ஆறு :**
   நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
   செய்யா(து) அமைகலா ஆறு.

7. **ஏழு :**
   எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
   விழுமம் துடைத்தவர் நட்பு.

8. **எட்டு :**
   கோளில் பொறியில் குணமலவே எண்குணத்தாள்
   தாளை வணங்காத் தலை.

9. **பத்து :**
   பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
   நல்லார் தொடர்கை விடல்.

**IV. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக :**

1. **கானடை**
   - கான் + அடை - காட்டைச்சேர்
   - கான் + நடை - காட்டுக்கு நடத்தல்
   - கால் + நடை - காலால் நடத்தல்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**2. வருந்தாமரை**

- வரும் + தாமரை - வரும் தாமரை மலர்
- வரும் + தா + மரை - வரும் தாவுகின்ற மான்
- வருந்தா + மரை - கவலைப்படாத மான்

**3. பிண்ணாக்கு**

- புள் + நாக்கு - பறவையின் நாக்கு
- பிண்ணாக்கு - ஆடுமாடு தின்னும் புண்ணாக்கு
- புண் + ஆக்கு - காயப்படுத்து

**4. பலகையொலி**

- பல + கையொலி - பல கைகளின் ஒலி
- பலகை + ஒலி - மரப்பலகையின் ஒலி

**V. அகராதியில் காண்க :**

1. ஆசுகவி - பாடு எனக் கூறியவுடன் பாடுபவர்
2. மதுரகவி - இலக்கண முறைப்படி செய்யுள் இயற்றபவர்
3. சித்திரகவி - காப்பியங்கள் படைப்பவர் (விரித்து கவிதை எழுதுபவர்)
4. வித்தாரக்கவி - சுவையுடன் பாடக்கூடியவர் (இறைகவி)

## இயல் - 9

**I. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக :**

**1. தாமரை இலைநீர் போல**

- என் நண்பன் **தாமரை இலைநீர் போல** எதன்மீதும் பற்றின்றி இருந்தான்.

**2. மழைமுகம் காணாப் பயிர் போல**

- நீண்ட ஆண்டுகளாக மகனைக் காணாத தாய் **மழைமுகம் காணாப் பயிர்போல** வாடியிருந்தாள்.

**3. கண்ணினைக் காக்கும் இமை போல**

- அன்னை தெரசா தன்னிடம் அடைக்கலம் தேடி வருவோரைக் **கண்ணினைக் காக்கும் இமை போல** பாதுகாத்தாள்.

**4. சிலை மேல் எழுத்து போல**

- மூத்தோர் வாக்கு **சிலை மேல் எழுத்துப் போல** நம் மனதில் பதிய வேண்டும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**II. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக :**

1. சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் ; 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும், பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

*****************

## 2 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

### Book Back
### இலக்கணக் குறிப்பு

**பண்புத்தொகை :**

1. மூதூர்
2. நன்மொழி
3. செந்தீ
4. இன்சொல்

**வினைத்தொகை :**

5. உறுதுயர்
6. வளர்வானம்
7. பயில்தொழில்
8. காய்மணி
9. உய்முறை
10. செய்முறை
11. எழுகதிர்

**உரிச்சொல்தொடர் :**

12. தடக்கை

**மூன்றாம் வேற்றுமைத் தொகை :**

13. கைதொழுது

**மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை :**

14. கைமுறை

**சொல்லிசை அளபெடை :**

15. வளைஇ
16. அசைஇ
17. கெழீஇ

**இசைநிறை அளபெடை :**

18. மாஅல்
19. தூஉய்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

www.Padasalai.Net www.CBSEtips.in

**செய்யுளிசை அளபெடை :**

20. பரூஉக்

**இன்னிசை அளபெடை :**

21. குரூஉக்கண்

**தொழிற்பெயர் :**

22. வியத்தல்
23. நோக்கல்
24. வழங்கல்
25. எழுதல்
26. உரைத்தல்
27. செப்பல்
28. இருத்தல்

**அடுக்குத்தொடர் :**

29. <u>ஊழ்ஊழ்</u>

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :**

30. வாரா (ஒன்றன்)

**வினையாலணையும் பெயர் :**

31. கேள்வியினான்

**எண்ணும்மை :**

32. காடனுக்கும் கபிலனுக்கும்
33. குண்டலுமும் குழைகாதும்
34. வண்ணமும் சுண்ணமும்

**வியங்கோள் வினைமுற்று :**

35. ஆடுக

**வேற்றுமைத்தொகை :**

36. மெய்முறை

**உவமைத்தொகை :**

37. முத்துப்பல்

38. காக்கென்று - காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்
39. கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. பொறித்த - பொறி + த் + த் + அ

| | | |
|---|---|---|
| பொறி | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 2. உரைத்த | - | உரை + த் + த் + அ |
| உரை | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |
| 3. வருக | - | வா(வரு) + க |
| வா | - | பகுதி (வரு எனக் குறுகியது விகாரம்) |
| க | - | வியங்கோள் வினைமுற்று விகுதி |
| 4. கிளர்ந்த | - | கிளர் + த்(ந்) + த் + அ |
| கிளர் | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |
| 5. தணிந்தது | - | தணி + த்(ந்) + த் + அ + து |
| தணி | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | சாரியை |
| து | - | படர்க்கை வினைமுற்று விகுதி |
| 6. பதிந்து | - | பதி + த்(ந்) + த் + உ |
| பதி | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |
| 7. மயங்கிய | - | மயங்கு + இ(ன்) + ய் + அ |
| மயங்கு | - | பகுதி |
| இ(ன்) | - | இறந்தகால இடைநிலை 'ன்' புணர்ந்து கெட்டது |
| ய் | - | உடம்படுமெய் |
| அ | - | பெயரெச்ச விகுதி |
| 8. அறியேன் | - | அறி + ய் + ஆ + ஏன் |
| அறி | - | பகுதி |
| ய் | - | சந்தி |
| ஆ | - | எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது |
| ஏன் | - | தன்மை ஒருமை வினைமுற்று |
| 9. ஒலித்து | - | ஒலி + த் + த் + உ |
| ஒலி | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 10. மலைந்து | - | மலை + த்(ந்) + த் + உ |
| மலை | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

| | | |
|---|---|---|
| 11. பொழிந்த | - | பொழி + த்(ந்) + த் + அ |
| பொழி | - | பகுதி |
| த்(ந்) | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. Vowel | - | உயிரெழுத்து |
| 2. Consonant | - | மெய்யெழுத்து |
| 3. Homograph | - | ஒப்பெழுத்து |
| 4. Monolingual | - | ஒருமொழி |
| 5. Conversation | - | உரையாடல் |
| 6. Discussion | - | கலந்துரையாடல் |
| 7. Storm | - | புயல் |
| 8. Tornado | - | சூறாவளி |
| 9. Tempest | - | பெருங்காற்று |
| 10. Land Breeze | - | நிலக்காற்று |
| 11. Sea Breeze | - | கடற்காற்று |
| 12. Whirl wind | - | சுழல்காற்று |
| 13. Classical literature | - | செவ்விலக்கியம் |
| 14.Epic literature | - | காப்பிய இலக்கியம் |
| 15.Devotional literature | - | பக்தி இலக்கியம் |
| 16.Ancient literature | - | பண்டைய இலக்கியம் |
| 17.Regional literature | - | வட்டார இலக்கியம் |
| 18.Folk literature | - | நாட்டுப்புற இலக்கியம் |
| 19.Modern literature | - | நவீன இலக்கியம் |
| 20.Nanotechnology | - | மீநுண்தொழில் நுட்பம் |
| 21.Biotechnology | - | உயிரித்தொழில் நுட்பம் |
| 22.Ultraviolet rays | - | புற ஊதாக்கதிர்கள் |
| 23.Space technology | - | விண்வெளித் தொழில்நுட்பம் |
| 24.Cosmic rays | - | விண்வெளிக் கதிர்கள் |
| 25.Infrared rays | - | அகச்சிவப்புக் கதிர்கள் |
| 26.Emblem | - | சின்னம் |
| 27.Thesis | - | ஆய்வேடு |
| 28.Intellectual | - | அறிவாளர் |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

29.Symbolism - குறியீட்டியல்
30.Aesthetics - அழகியல், முருகியல்
31.Artifacts - கலைப்படைப்புகள்
32.Terminology - கலைச்சொல்
33.Myth - தொன்மம்
34.Consulate - துணைத்தூதரகம்
35.Patent - காப்புரிமை
36.Document - ஆவணம்
37.Guild - வணிகக் குழு
38.Irrigation - பாசனம்
39.Territory - நிலப்பகுதி
40.Belief - நம்பிக்கை
41.Renaissance - மறுமலர்ச்சி
42.Philosopher - மெய்யியலாளர்
43.Revivalism - மீட்டுருவாக்கம்

**********

## 3 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## இயல் - 1

## அன்னை மொழியே

17. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
    - அழகாய் அமைந்த செழுந்தமிழே!
    - பழமைக்கும் பழமையானது.
    - புதுமைக்கு புதுமையானது.
    - குமரிக்கண்டத்தில் அரசாண்டது.
    - பாண்டிய மன்னனின் மகளே!
    - சங்க இலக்கியமாய் விளங்குகின்றது.
    - திருக்குறளின் பெரும் பெருமைக்குரியது.

18. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

| | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | கடல் முத்தினைத் தருகிறது. |
| முச்சங்கம் | முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | மூன்று வகையான சங்குகளைத் தருகின்றது. |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

| | | |
|---|---|---|
| மெத்த வணிகலன் | ஐம்பெருங்காப்பியங்களை உடையது. | வணிகக் கப்பல்கள் செல்லும் படி இருக்கிறது. |
| சங்கத்தவர் காக்க | சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது. | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. |

## தமிழ்ச்சொல் வளம்

19. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
- தென்னம்பிள்ளை விற்பனைக்கு உள்ளது.
- நான் மாங்கன்று நட்டேன்.
- நான் வயலில் நெல் நாற்று நட்டேன்.
- காட்டில் பனைவடலிகள் சிலவற்றைக் கண்டேன்.
- சோளப்பைங்கூழ் பசுமையாக இருந்தது.

20. **அறிந்தது**, **அறியாதது**, **புரிந்தது**, **புரியாதது**, **தெரிந்தது**, **தெரியாதது**, **பிறந்தது**, **பிறவாதது** இவை அனைத்தும் யாம் அறிவோம் அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற் பெயர்களாக மாற்றி எழுதுக.

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அறிந்தது | அறிதல் |
| அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் |
| புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் |
| தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் |
| பிறவாதது | பிறவாமை |

## இயல் - 2
## காற்றே வா

1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான் இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ….
முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு ‘நீர்’ தன்னைப் பற்றிப் பேசினால் … உங்கள் கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
- கடலாக நான், ஆறாக நான், குளமாக நான், அருவியாக நான், உணவாக நான், அமிழ்தமாக நான், அணையாக நான், உயிராக நான், உயிரோட்டமாக நான், உணவு தயாரிக்க உதவ நான். இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

2. சோலைக் காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல ஓர் உரையாடல் அமைக்க.

**சோலைக் காற்று :** நீ எப்படி வருகிறாய் மின் காற்றே !
**மின்விசிறிக் காற்று :** செயற்கையாக வீசி வருகிறேன்.
**சோலைக் காற்று :** நான் இயற்கையாகவே வருகிறேன்.
**மின்விசிறிக் காற்று :** ஓ அப்படியா … !
**சோலைக் காற்று :** உன்னால் இதமான காற்றைத் தர முடியுமா?
**மின்விசிறிக் காற்று :** ஏன் முடியாது, மெதுவாகவும் வீசுவேன், வேகமாகவும் வீசுவேன்.
**சோலைக் காற்று :** நானும் தான்.
**மின்விசிறிக் காற்று :** என்னால் யாருக்கும் தீங்கு ஏற்படாது.
**சோலைக் காற்று :** நான் காலநிலைக்கு ஏற்ப வீசுவேன்.
**மின்விசிறிக் காற்று :** வீடு கட்டி, வசதியாக வாழ்பவர்களுக்கு நான் வீட்டை அழகு செய்கிறேன்.
**சோலைக் காற்று :** நாம் இருவருமே மனிதர்களுக்கு முக்கியம்.
**மின்விசிறிக் காற்று :** ஆமாம், நாம் இணைந்தே மனிதர்களுக்கு இன்பம் அளிப்போம்.

## முல்லைப் பாட்டு

3. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

- மழை பெய்யும் போது இலைகளில் படுகின்ற நீரின் அழகோ அழகு.
- பளபளவென இலை மின்னும். அதில் மழைத்துளி பட்டுத் தெறிக்கும்.
- இலைகளிலிருந்து நீர் சொட்டு சொட்டாக விழும். இலைகளுக்கு பொட்டு இட்டது போன்று இருக்கும்.
- உடலில் நீர் படும்போது ஒரு வித சிலிர்ப்பு ஏற்படும்.
- நேரம் ஆக ஆக உடல் குளிர் எடுக்கத் தொடங்கும்.
- பற்கள் இசையை உண்டாக்கும். அது ஒரு தெய்வீக அனுபவம்.
- தேங்கிய குட்டையில் குழந்தைகளால் ஏற்படும் ஒலி இசையின் உச்சமாகும்.
- ஓடுகின்ற நீரில் காகிதத்தால் கப்பல் செய்துவிட்டு மகிழ்ந்துவிளையாடுகின்ற சிறுவர்களின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

4. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

| | | |
|---|---|---|
| மல்லிகைப்பூ | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| சுவர் கடிகாரம் | - | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| பூங்கொடி | - | அன்மொழித்தொகை |
| ஆடுமாடுகளுக்கு | - | உம்மைத்தொகை<br>ஆடுகளும் மாடுகளும் |
| தண்ணீர்த்தொட்டியில் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| குடிநீர் | - | வினைத்தொகை |
| மணி பார்த்தாள் | - | இரண்டாம் வேற்றுத்தொகை |

## இயல் - 3

## விருந்து போற்றுதும்

1. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலைவைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது. இப்படியாக கால மாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.
   - வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவது இல்லை.
   - அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதில்லை.
   - இருப்பினும் திருவிழாக்காலங்களில் ஊருக்குவரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.

### காசிக்காண்டம் - அதிவீரராம பாண்டியன்

2. காசிக்காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களைப் பட்டியலிடுக.
   - முகமலர்ச்சியுடன் விருந்தினரை நோக்குதல்.
   - அருகில் அமர வைத்தல்.
   - மனம் மகிழும்படி பேசுதல்.
   - நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
   - விடைபெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லுதல்.

### மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார்

3. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?
   - **முல்லை நில உணவுப் பொருள்கள் :**
     சாமை, வரகு
   - **மருத நில உணவுப் பொருள்கள் :**
     செந்நெல், வெண்ணெல்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
   - பரிசில் பெற்ற கூத்தன் பரிசில் பெறப்போகும் கூத்தலை அழைத்தான்.
   - அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
   - சிற்றூரை அடையுங்கள்.
   - நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.
   - உரிமையுடன் வரவேற்பர்.
   - உறவினர்போல் பழகுவர்.
   - நெய்யில் பொறித்த மாசிசத்துடன் தினைச்சோற்றை வழங்குவார்கள்.

5. கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு ! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

| | | |
|---|---|---|
| கண்ணே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| காலையில் நீயெழும்பு | - | வேற்றுமைத் தொடர் |
| மாமழை பெய்கையிலே | - | உரிச்சொல் தொடர் |
| மாம்பூவே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| பாடினேன் தாலாட்டு | - | வினைமுற்றுத்தொடர் |
| ஆடி ஆடி ஓய்ந்துறங்கு | - | அடுக்குத்தொடர் |

## திருக்குறள்

6. வேலொடு நின்றான் இடுஎன்பது போலும்
கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**அணி சுட்டல் :** இக்குறளில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம் :** உவமை உவமேயம் இரண்டிற்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**அணிப் பொருத்தம் :**

**உவமை :** வேல் போன்ற ஆயுதங்களைக் கொண்டு வழிப்பறி செய்தல்.

**உவமேயம் :** ஆட்சி அதிகாரத்தை கொண்டு வரிவிதித்தல்.

**உவம உருபு :** போல

இக்குறட்பாவில் உவமை உவமேயம் இரண்டிற்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இக்குறள் உவமையணி ஆகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# இயல் - 4

1. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.
   - அறிவியல் மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.
   - பழைய தவறான புரிதல்களை நீக்குகின்றது.
   - எண்ணங்களை மாற்றுகின்றது.
   - கண்காணிப்புக் கருவி நம் பணியை எளிமையாக்குகின்றது.
   - அலைப்பேசி உலகை நம் கண் முன் கொண்டு வருகின்றது.
   - வங்கிகளில் ரோபோக்கள் வேலை செய்கின்றன.

## பெருமாள் திருமொழி – குலசேகர ஆழ்வார்

2. மாளாத காதல் நோயாளான் போல் என்னும் தொடரில் உவமை காட்டும் செய்தியை விளக்குக.
   - மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச்சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.
   - நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.

3. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது ; தந்தை என்னிடம் "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாடவேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

**வழுவமைதிகள் :**
   - நேற்றிரவு பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது - கால வழுவமைதி
   - இலச்சுமி கூப்பிடுகிறாள் - திணை வழுவமைதி
   - இதோ சென்றுவிட்டேன் - கால வழுவமைதி
   - என்னடா விளையாட வேண்டுமா? - திணை வழுவமைதி
   - அவனை அவிழ்த்துவிட்டேன் - திணை வழுவமைதி
   - நீயும் இவனும் விளையாடுங்கள் - திணை வழுவமைதி
   - இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள் - திணை வழுவமைதி



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# இயல் - 5

1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
   - இடைக்காடனார் குசேலபாண்டியன் முன்பு பாடினார்.
   - மன்னன் புலவரை அவமதித்தான்.
   - புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
   - இறைவன் கோவிலைவிட்டு நீங்கினார்.
   - இறைவனின் அருளைப் பெற புலவருக்கு சிறப்புச் செய்தார்.

2. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
   - முதலில் படிப்பின் முக்கியத்துவத்தைக் கூறுவேன்.
   - படிப்பதனால், சமுதாயத்தில் நமக்கு கிடைக்கும் மதிப்பை எடுத்துக் கூறுவேன்.
   - படிக்கவில்லையானால் அதனால் வரும் இழப்பைக் கூறுவேன்.
   - நாம் இச்சமுதாயத்தில் நன்கு வாழ கல்வி மிகவும் அவசியம். நம் வருங்கால சந்ததியினருக்கும் அவசியம் என்பதை உணர்த்த, நாம் உதாரணமாக இருக்க வேண்டும்.
   - இன்று பள்ளிக் கல்வியைப் பெற அரசு பல உதவிகள் செய்வதையும் கூறி புரிய வைப்பேன்.

3. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

   **பொருள்கோள் சுட்டல் :**
   இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

   **பொருத்தம் :**
   இத்திருக்குறளின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இத்திருக்குறள் ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்கு சான்றாகும்.

# இயல் - 6

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

| **உறுப்பு** | **ஆடிய அணிகலன்கள்** |
|---|---|
| கால்கள் | கிண்கிணி சிலம்பு ஆடியது. |
| இடையில் | அரைஞாண், அரைவடம் ஆடியது. |
| நெற்றியில் | பொட்டுடன் வட்டமான சுட்டியும் ஆடியது. |
| காதுகளில் | குண்டலமும் குழையும் ஆடியது. |
| உச்சி கொண்டையில் | முத்துக்கள் ஆடியது. |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. ‘கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது ; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.’ – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

| நிலம் | தொழில் | இன்றைய வளர்ச்சி |
|---|---|---|
| குறிஞ்சி | தேனெடுத்தல், திணை, நெல், கிழங்கு பயிரிடல். | இயற்கையோடு இணைந்த பழங்கள், தேன்,காபி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளன. |
| மருதம் | நெல், கரும்பு, விவசாயம், ஆடு, மாடு வளர்ப்பு. | உணவுப் பொருள் உற்பத்தியில் உலகளவில் தன்நிறைவு பெற்று வருகிறது. |
| நெய்தல் | மீன்பிடித்தல், உப்பு எடுத்தல். | மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மூலம் உலக அளவில் வெவ்வேறு நாடுகளுக்கு மீனும் உப்பும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. |

3. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





(அ) ஒயிலாட்டம் பெண்கள் ஆடுவதுண்டா?
ஆண்கள் ஆடுவதே வழக்காக உள்ளது.
(ஆ) ஒயிலாட்டம் தனிநபர் ஆட்டமா? குழு ஆட்டமா?
ஒயிலாட்டம் குழு ஆட்டம் ஆகும்.
(இ) கரகத்தின் மேல் உள்ள பறவையின் பெயர் என்ன?
கரகத்தின் மேல் உள்ள பறவை கிளி.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(ஈ) கரகாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகளின் பெயர்களை கூறுக?
நையாண்டிமேளம், தவில், பம்பை, நாதஸ்வரம்

## திருக்குறள்

1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பெருந்துவதைக் குறள் வழி விளக்குக.
   - கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அறிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.
   - மனவலிமை, குடி மக்களைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
   - சுற்றத்தாரிடம் அன்பு இல்லாதவர் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள இயலாது.
   - எளிதில் பகைக்கு ஆட்கொள்ள நேரிடும்.
   - தொழுத கையுள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும்.

## இயல் - 7

1. ‘முதல்மழை விழுந்ததும்’ என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
   முதல்மழை விழுந்ததும் நிகழ்பவை :
   - மேல் மண் பதமாகிறது.
   - உழவர்கள் இறைவழிபாடு செய்தனர்.
   - நல்ல நாள் நட்சத்திரம் பார்த்தனர்.
   - வெள்ளி முளைக்கும் முன் பொன் ஏர் பூட்டினர்.
   - கொழுவை அழுத்தி உழுதனர்.
   - நிலம் சிலிர்த்தது.
   - உழவர்கள் மகிழ்ந்தனர்.

2. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான் ; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.
   - மண்ணாசை காரணமாக அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டைக் கைப்பற்ற போருக்குச் செல்வர்.
   - வீரர்கள் வஞ்சிப்பூ சூடுவர்.
   - தன் நாட்டைக் கைப்பற்ற வந்த அவந்தி நாட்டு மன்னனோடு எதிர்த்துப் போரிடுவர். வீரர்கள் காஞ்சிப்பூவை சூடுவர்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. ‘தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்’ - இடம் சுட்டிப் பொருள் விளக்கு.

**இடம் :** மாநகரத் தலைவர் செங்கல்வராயன் தலைமையில் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் சென்னையைப் பற்றிய தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து ம.பொ.சி. முழங்கிய வரி இது.

**பொருள் :** “தலையைக் கொடுத்தேனும் தலைநகரை காப்போம்”

**விளக்கம் :**

- ஆந்திரா மாநிலம் பிரியும் போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.
- அதனை மறுத்து ‘என்ன விலைக் கொடுத்தேனும் சென்னையை நம்மோடு வைத்துக் காக்க வேண்டும்’ என்ற பொருளில் கூறியது இது.

4. ‘பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்’

**வினாக்கள் :**

(அ) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
(ஆ) பாடலில் அமைந்துள்ள மோனையை எடுத்து எழுதுக.
(இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.
(ஈ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

**விடைகள் :**

(அ) சிலப்பதிகாரம்
(ஆ) பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்கள் :
**ப**கர்வனர் - **ப**ட்டினும்
(இ) பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள் :
ப**க**ர்வனர் - ந**க**ர வீதியும்
(ஈ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் :
சந்தனம், ஏலம், அகில்

**5. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக :**

பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி, பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

காணப்படுகிறது. இதன்கண் வம்ச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை. ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வம்ச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

**மையக்கருத்து – மெய்க்கீர்த்தி :**

சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்தி பற்றி கூறப்பட்டுள்ளது. பேரரசரின் போர் வெற்றிகளையும், வரலாற்றையும் மெய்ப்புகழையும் சாசனத்தில் எழுதி வைப்பது மெய்க்கீர்த்தி எனப்படும். மெய்க்கீர்தி எழுதும் பழக்கம் முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில் காணப்படுகிறது. பிற்கால மெய்க்கீர்த்திகள் வமிச பரம்பரையை விரித்துக் கூறுகின்றன.

## இயல் - 8

1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

| அறம் | அன்று | இன்று |
|---|---|---|
| வணிகம் | வணிக நோக்கம் இல்லை. | பயனைக் கருதியே வணிகம் செய்கின்றனர். |
| போர் | அற வழியில் போர் நடைபெற்றது. | ஜாதி, மதம் அடிப்படையில் போர் நடைபெற்றது, |
| அரசியல் | நீர் வளம், நில வளம் பெருக்கி மக்களைக் காத்தனர். | தங்களை வளமாக்கிக் கொள்கின்றனர். |
| கொடை | இல்லாதவருக்கு வாரி வழங்கினர். | உடன் பிறந்தவருக்கும் கூட கொடுப்பதில்லை. |
| உதவி | துன்புற்றவருக்கு உதவினர். | காணொளியில் பரப்பி மகிழ்கின்றனர். |

2. ‘சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்’ என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்பு ஒன்றை உருவாக்குக.

- நமது சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளில் முக்கியமாகக் கருதப்படுவது சுற்றுச்சூழல் பாதுகாப்பு.
- சுற்றுச்சூழலைப் பேணுவது நமது தலையாய கடமை.
- காற்றை மாசுபடுத்தக் கூடாது.
- மரங்களை வளர்க்க வேண்டும்.
- ஒவ்வொருவரும் தன் பொறுப்பை உணர்ந்து இயற்கைக்கு ஊறுவிளைவிக்கும் செயல்களை அறவே தவிர்க்க வேண்டும்.
- அவரவர் மனதில் மாற்றம் ஏற்பட்டாலொழிய வேறுவழிகள் இதற்கு இல்லை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக.
   - அகவல் ஓசை பெற்று வரும்.
   - ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
   - ஆசிரியத் தளை மிகுதியாகவும், பிறத் தளைகள் விரவியும் வரும்.
   - மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
   - ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

4. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புப்படுத்தி ஒரு பத்தி அமைக்க.

**வாளியில் தண்ணீர்** எடுத்து வந்து **சாயக்குவளையில்** ஊற்றி **கந்தைத் துணியால்** துடைத்து **கட்டைத் தூரிகையால்** சுவர்களில் வர்ணம் பூசுவர்.

## இயல் - 9

1. 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

**இடம் :** நாகூர் ரூமியால் எழுதப்பட்ட 'சித்தாளு' கவிதையின் வரிகள்.

**பொருள் :** சித்தாளின் மனச்சுமைகளை செங்கற்களால் அறிய முடியாது.

**விளக்கம் :** கற்களைச் சுமந்தால் தான் அடுத்தவேலை உணவு என்ற சித்தாளின் மனச்சுமைகளை செங்கற்களும் அறிவதில்லை, மனிதர்களும் அறிவதில்லை.

2. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றை 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.
   - தோல்வி நிச்சயம் என்று எண்ணித் தோற்றால் அதுவும் வெற்றியே என்று எண்ணுபவர் கதை மாந்தர்.
   - கதை நாயகன் பிச்சைக்காரனுக்கு தானம் செய்கிறான்.
   - பிச்சைக்காரனும் வாழ்த்துகிறான்.
   - சூழ்நிலையால் மனம் மாறிய நாயகன் பிச்சைக்காரன் தட்டிலிருந்து இரண்டனா எடுக்கிறான். சாபம் வாங்குகிறான்.
   - பணம் இல்லாததால் ஊருக்கு நடந்தே செல்கிறான்.
   - அவன் செல்ல வேண்டிய இரயில் விபத்துக்குள்ளாகிறது.
   - தர்மம் காப்பாற்றியதா? என்றால் அதற்கு விடை தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
- நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்.
- நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.

4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு தற்குறிப்பேற் அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
- **அணியிலக்கணம்** : இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.
- **சான்று** : போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி 'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'
- **அணிப்பொருத்தம்** : கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்ற போது மதில் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து மதுரைக்குள் வரவேண்டாம் எனக் கூறுவது போல் புலவர் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார்.

**********

## 5 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

1. மனோன்மணீயம் சுந்தரனாரில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**
- நிலத்தைப் பெண்ணாகவும் பாரதநாட்டை முகமாகவும் தென்னிந்தியாவை நெற்றியாகவும், திராவிட நாட்டை அதில் திலகமாகவும், தமிழை அத்திலகத்தின் நறுமணமாகவும் உருவகித்துள்ளார்.
- உலகமெங்குமே பரவித் தன் இலக்கண, இலக்கிய மணத்தை எல்லோருக்கும் நுகரச் செய்து மகிழச் செய்த மொழி தமிழ்.
- 'நின் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துதுமே' என்கிறார்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து :**

- ‘தொன்மை’ அறியா மொழி என்பதை ‘முன்னைக்கும் முன்னை முகிழ்த்த’ என்கிறார்.
- இலெமூரியாக் கண்டத்தில் இரு சங்கங்களைத் தோற்றுவித்து பாண்டியர்களே தமிழை உலக மொழிகளுக்குப் பேரரசியாக்கினர் என்கிறார்.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஐம்பெருங்காப்பியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின என்கிறார்.
- தளர்வுற்றாலும் வீழாது இருக்கும் தமிழாகிய செந்தாமரையில் தேனைப் பருகிப் பண்ணிசைக்கும் வண்பாய் உன்புகழ் பரப்பிட முன்வந்தோம் என்கிறார்.

2. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

- கார்காலம் தொடங்கிவிட்டது.
- பெருமழை பொழிந்தது.
- மாலை நேரத்தில் முதுப்பெண்கள் ஊரின் புறத்தே சென்று முல்லைப் பூவுடன் நெல்லையும் சேர்த்துத் தூவி தெய்வத்தை தொழுதனர்.
- அப்போது ஒரு ஆய் மகள் சிறுதாம்பு கயிற்றால் கட்டப்பட்ட பசியால் வாடிய கன்றின் வருத்தத்தை போக்க நினைத்து, உன் தாய் இப்போது வந்துவிடுவாள் வருந்தாதே என்று கூறினாள்.
- அதனை நற்சொல் எனக் கேட்ட முதுப்பெண்கள் தலைவியிடம் சென்று உன் தலைவன் திரும்பி வருவது உறுதி என்று கூறி ஆற்றுப்படுத்தினர்.

3. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

- இடைக்காடனார் குசேல பாண்டியனிடம்சென்று கவிதைப் பாடினார்.
- மன்னன் தலை அசைக்காமல் அமர்ந்திருந்தான்.
- புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன் மதுரையைவிட்டு நீங்கினார்.
- மன்னன் இறைவனிடம் காரணம் கேட்டான்.
- புலவரை அவமதித்த தவறுக்கு வருந்தினான்.
- இறைவன் மீண்டும் மதுரைக்கு வந்தார்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும், கலைஞர்களையும், வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.
   - ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும், கலைஞர்களையும், வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது.
   - இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருக்கின்றது.
   - இன்றைய காலகட்டத்தில் மாணவர்களுக்கு அரசு தரும் நலத்திட்டங்களை ஆசிரியர்கள் பெற்றுத் தருகின்றனர்.
   - எடுத்துக்காட்டாக : பாடநூல், பேருந்து பயணச் சீட்டு, மிதிவண்டி, கணினி போன்றவை.

5. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

| **மருவூர்ப்பாக்க வணிக வீதிகள்** | **இக்கால வணிக வளாகங்கள்** |
|---|---|
| அனைத்துப் பொருள்களும் கிடைத்தன. | இங்கேயும் அனைத்துப் பொருள்களும் கிடைக்கின்றன. |
| கடைத் தெருக்கள் இயற்கையான சூழலில் அமைந்திருந்தது. | அங்காடிகள் செயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. |
| தெருக்களில் முத்து, மணி, பொன்னைக் குவித்து வைத்து விற்றனர். | பாதுகாப்பாக குளிரூட்டப்பட்டு கடைகளில் விற்கப்படுகின்றன. |
| உற்பத்தியாளரே விற்பனையாளர். | உற்பத்தியாளர் வேறு, விற்பனையாளர் வேறு. |

6. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.
   - இராஜராஜசோழன் மக்களுக்கு உயிராக இருக்கின்றான்.
   - அவன் நாட்டின் சிலம்புகள் புலம்பும், மக்கள் புலம்புவதில்லை.
   - ஓடைகள் கலங்கும், மக்கள் கலங்குவதில்லை.
   - மாங்காய் வடுபடும், மக்கள் வடுபடுவதில்லை.
   - மலர்கள் பறிக்கப்படும், மக்களின் உரிமை பறிக்கப்படுவதில்லை.
   - காடுகள் கொடியது, மக்கள் கொடியவர் இல்லை.
   - மான்களின் மருளும், மக்கள் கண்கள் மருளாது.
   - மீன்கள் பிறழும், மக்கள் பிறழ்வதில்லை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

7. கருணையின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

- மழையில்லாப் பயிரைப் போல வாடுகிறேன்.
- மரத்திலிருந்து பரிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறேன்.
- அன்பினால் உண்டான புண்ணைப் போலவும், துணையைப் பிரிந்த பறவையைப் போலவும் வாடுகிறேன்.
- உய்முறை அறியேன், மெய்முறை அறியேன் உணவு செய்முறை அறியேன் எனக் கவிதை மூலம் விவரிக்கின்றார்.

## கடிதங்கள்

1. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

மதுரை,
20.01.2022.

அன்புள்ள நண்பா,

நலம், உன் நலமறிய ஆவல். மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றுள்ளாய். மகிழ்ச்சி ! வெற்றிகள் தொடரட்டும் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்,

(க. அன்பரசு)

**உறைமேல் முகவரி :**
பெறுநர்,
சு. தமிழரசு,
10, இந்திரா நகர்,
தேனி.

2. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

திருச்சி,
20.01.2022

அனுப்புநர்
ப. கவின்,
73, பாரதி தெரு,
திருச்சி.

பெறுநர்
உயர்திரு. உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
திருச்சி.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக.

வணக்கம். இன்று காலை அகில் உணவு விடுதிக்கு சென்றேன். உணவு உண்டேன். அங்கு வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது. எனவே அந்த உணவு விடுதி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு,

(ப. கவின்)

இணைப்பு :
உரிய சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளன.

**உறைமேல் முகவரி :**
பெறுநர்
உயர்திரு. உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
திருச்சி.

3. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

தேனி,
27.01.2022

அனுப்புநர்
க. எழில்,
15, காந்தி நகர்,
தேனி

பெறுநர்
உயர்திரு. நாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தினமலர் நாளிதழ்,
தேனி

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : கட்டுரை வெளியிட வேண்டி.

வணக்கம். தங்கள் நாளிதழில் பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியிடும் பொங்கல் சிறப்பு மலரில் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற எனது கட்டுரையை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு,



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

(க. எழில்)

**உறைமேல் முகவரி :**

பெறுநர்
உயர்திரு. நாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தினமலர் நாளிதழ்,
தேனி.

4. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

**அனுப்புநர்**
க. எழில்,
15, காந்தி நகர்,
தேனி

**பெறுநர்**
உயர்திரு மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்சார வாரியம்,
தேனி மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : மின்விளக்கு வசதி வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம், எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. ஆகையால் இரவில் சாலையில் நடந்து செல்வோர் மிகவும் சிறப்படுகின்றனர். ஆகையால் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை சரி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,

(க. எழில்)

இடம் : தேனி
தேதி : 20.01.2022

**உறைமேல் முகவரி :**
பெறுநர்,
உயர்திரு மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்சார வாரியம்,
தேனி மாவட்டம்.

## மொழிபெயர்ப்பு

### இயல் - 1

1. (i) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – Nelson Mandela.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால், அது அவனது தலையில் சென்று பதிந்துவிடும் : ஆனால் அவனது தாய்மொழியில் பேசினால் நாம் பேசுவது அவனது இதயத்தில் பதிந்துவிடும். – நெல்சன் மண்டேலா.

(ii) Language is the read map of a culture, it tells you where its people come from and where they are going – Rita Mae Brown.

மொழி நாகரிகத்தைக் காட்டுகின்ற வழி : அது மக்களை எங்கிருந்து வந்தார்கள் : எங்குச் செல்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும். – ரிடா மே பிரௌன்.

## இயல் - 2

2. தமிழில் மொழி பெயர்த்துத் தலைப்பிடுக.

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering the colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**புலரும் காலைப்பொழுது**

பொன்னிறக் கதிர்களைக் கொண்ட சூரியன் காலையில் உதிக்கின்றது. அதன் ஒளிக்கதிர்களால் இருள் மறைகிறது. வெண்ணிற வானம் வெண்மேகத்தால் சுழல்கிறது. வண்ணப் பறவைகள் கீச் கீச் என ஒலியெழுப்பி இசைக்கின்றன ; அழகான வண்ணத்துப் பூச்சிகள் பூக்களைச் சுற்றி நடனமாடுகின்றன. பூக்களின் நறுமணம் காற்றில் பரவுகின்றது. தென்றல் காற்று எங்கும் வீசி, எல்லாவற்றையும் அமைதியான சூழலில் மகிழ்வு நிலையில் வைக்கின்றது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## இயல் - 3

3. தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils we best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Sri Lanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

**தமிழ்ப்பண்பாடு**

மதிப்பிற்குரிய பெரியோர்களே,
இளங்கோவனாகிய நான். பத்தாம் வகுப்பு படிக்கிறேன். தமிழ்ப்பண்பாடு குறித்துச் சில கருத்துகளைக் கூற இங்கு வந்துள்ளேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சிறந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டிருந்ததைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. மொழிக்கும் வாழ்க்கைக்கும் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பெற்றிருப்பவர்கள் யாரெனில் தமிழர்கள். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து மற்றும் உலகமெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையில் தமிழ்ப்பண்பாடு வேர்விட்டுள்ளது. நம் பண்பாடு மிகப் பழமையானதாக இருப்பினும் தொடர்ந்து அது தன்னை நிகழ்காலத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்வது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அனைவருக்கும் நன்றி.

## இயல் - 4

**4. தமிழில் மொழி பெயர்க்க**

**Malar :** Devi, Switch off the lights when you leave the room.

**Devi :** Yeah, we have to save electricity.

**Malar :** Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**Devi :** Who knows? In future our country may launch artificial moons to light our night time sky?

**Malar :** I have read some other countries are going to lunch these types of illumination satellites near future.

**Devi :** Superb news ! if we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

**மலர் :** தேவி, அறையைவிட்டு வெளியேறும்போது மின்விளக்குகளை அனைத்து விடு.
**தேவி :** ஆமாம், நாம் மின்சாரத்தை சேமிக்க வேண்டும்.
**மலர் :** நம்முடைய நாடு இரவில் நம்முடைய வீதிகளை வெளிச்சமாக்குவதற்கு நிறைய மின்சாரத்தை செலவிடுகிறது.
**தேவி :** யாருக்குத் தெரியும்? எதிர்காலத்தில் நம் நாட்டில் இரவு நேர வானத்தை வெளிச்சமாக்க செயற்கை நிலவுகளை செலுத்தலாம்.
**மலர் :** வேறு சில நாடுகளும் எதிர்காலத்தில் இந்த வகையிலான ஒளி அமைப்புச் செயற்கைகோள்களை செலுத்தப்போகிறார்கள் என்று நானும் படித்திருக்கிறேன்.

**தேவி :** அருமையான செய்தி ! நாம் செயற்கை நிலாவை அறிமுகப்படுத்தினால் நிலப்பகுதியில் ஒளியைப் பரப்புவதன் மூலம் இயற்கைப் பேரழிவின் போது மின்சாரம் இல்லாத இடங்களில் ஒளியைப் பாய்ச்சலாம். நிவாரணத்தின் போது உதவலாம்.

## இயல் - 5

**5. ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக :**

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்<br>பேத்தி.<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>- **பாரதிதாசன்** | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation.<br>- **Translated by Kavingnar Desini** |

(i) Lute music (ii) chamber (iii) to look up
(iv) grand – daughter (v) rote



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(vi) didactic compilation

| | | |
|---|---|---|
| (i) Lute music | - | யாழிசை |
| (ii) Chamber | - | அறை |
| (iii) to look up | - | எட்டிப்பார்த்தல் |
| (iv) grand – daughter | - | பேத்தி |
| (v) rote | - | நெட்டுரு (குருட்டுப் பாடம்) |
| (vi) didactic compilation | - | நீதி நூல் திரட்டு |

## இயல் - 6

6. Therukoothu is, as its name indicates, a popular, form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana. Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen the twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the artists sing in their own voice. Artists dress themselves with heavy costumes and bright make up. Koothu is very popular among rural areas.

**தெருக்கூத்து :**

தெருக்கூத்து என்ற பெயருக்கேற்பக் கலைநயத்துடன் தெருக்களில் ஆடக்கூடியது கிராமியக் கலைஞர்களால் இது நிகழ்த்தப்படுகிறது. தெருக்கூத்துக் கதைகள் இராமாயணம், மகாபாரதம் மற்றும் இதரப் பழங்காலப் புராணங்களிலிருந்து எடுத்து நிகழ்த்துகிறார்கள். கலைகள் நிகழ்த்தப்படும் இடங்களிலேயே பாடல்களும் உரையாடல்களும் தெரிந்தெடுத்துச் செயல்படுத்துகிறார்கள். ஒரு கூத்துக் குழுமம் பதினைந்திலிருந்து இருபது வரையுள்ள கலைஞர்களால் நடத்தப்படுகிறது. இசைக் குழுமத்தில் பாடகர்கள் இருந்த போதிலும் அவர்கள் தங்கள் சொந்தக் குரலிலே தான் பாடுவார்கள். கலைஞர்கள் மிகுந்த ஒப்பனையும் - ஆடை அணிகலன்களும் பிரமாண்ட மாகக் காட்சிதருமளவுக்குச் செய்திருப்பர். கிராமப் புறங்களில் இவ்வகைக் கூத்துகள் மிகவும் பிரசித்தி பெற்றவை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## இயல் - 7

7. Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the said. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

தமிழகத்தின் ஐவகை நிலப்பகுதிகளில், சங்க இலக்கியம் தெரிவிப்பது. மருதநிலம் தான் வளமானதும் விவசாயத்திற்கு உகந்ததுமாய்க் காணப்படுகிறது. விவசாயிகள் சூரிய ஒளி, கால மழை, மண் வளம் இவற்றை நம்பித்தான் இருக்கிறார்கள். இயற்கை வளங்களில் பண்டைய தமிழர் வாழ்வில் சூரிய ஒளிக்கு முதன்மையான இடம் தரப்பட்டுள்ளது.

## இயல் - 8

8. Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry. "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behavior, the Emperor summoned him to



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

his presence and asked him. "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked". Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar our of his palace.

முன்பொரு காலத்தில் ரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் 'நான் கடவுளால் உதவி செய்யப்படுகிறேன்' என்று ரோம் நகரிலுள்ள தெருக்களில் கத்திக்கொண்டு இருந்தான். இரண்டாம் பிச்சைக்காரன் 'நான் அரசனால் உதவி செய்யப்படுகிறேன்' என்று அழுது கொண்டு இருந்தான். இதை அவர்கள் தொடர்ந்து செய்து வந்து கொண்டிருந்தனர். இதனை அறிந்த ரோம் நகர் அரசன் தன்னைப் பற்றிப் புகழ்ந்து தெருக்களில் அலைந்த பிச்சக்காரனுக்கு உதவ முன் வந்தார். அந்த அரசன் பெரிய முழு ரொட்டி ஒன்றினைத் தயார் செய்து உள்ளே தங்கத் துகள்களால் நிரப்பிக் கொடுக்க ஆணையிட்டான். அந்தப் பிச்சைக்காரன், ரொட்டியின் எடை பெரியதாக இருப்பதாகக் கருதி, அவனுடைய நண்பனைச் சந்தித்து அதனை விற்றான். அதனை வாங்கிய முதல் பிச்சைக்காரன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். அதனை அவன் அறுத்தெடுத்தபோது. உள்ளே தங்கத் துகள்கள் இருப்பதைக் கண்டான். அவன் கடவுளுக்கு நன்றி கூறியபின், அன்றிலிருந்து அவன் பிச்சை எடுப்பதை நிறுத்தினான். ஆனால் மற்றப் பிச்சைக்காரன் நகரில் மீண்டும் பிச்சை எடுக்கத் தொடங்கினான். அந்தப் பிச்சைகாரனின் நடவடிக்கையைக் கண்டு குழப்பமடைந்த அந்நாட்டு அரசன், அவனை அழைத்துத் தான் அனுப்பி வைத்த ரொட்டியை என்ன செய்ததாகக் கேட்டறிந்தான். அப்போது அந்தப் பிச்சைக்காரன் அதனைத் தூக்க முடியாமல் அதனை விற்றுவிட்டதாகக் கூறினான். பின்னர், அரசர் அவனிடம், 'உண்மையில் உன் நண்பனுக்குக் கடவுள்தான் உதவியுள்ளார்' எனக் கூறி அந்தப் பிச்சைக்காரனை அரண்மனையை விட்டு வெளியேற்றினார்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# இயல் - 9

**9. மொழிபெயர்க்க :**

(1) Education is what remains after one has forgotten what one has learned in School. - Albert Einstein.
(2) Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb.
(3) It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle.
(4) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

(1) Education is what remains after one has forgotten what one has learned in School. - Albert Einstein.
கல்வி என்பது ஒருவரால் மறக்கப்பட்டதும் பள்ளியில் ஒருவரால் கற்கப்படுவதுமே. – ஆல்பர்ட் ஐன்ஸ்டின்.

(2) Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb.
நாளை என்பது இந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாளாகும். - ஸ்பானிஷ் பழமொழி.

(3) It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle.
நம் வாழ்வின் இருளான சமயங்களில் தான் ஒளியை நோக்கி முனைந்து பார்க்க வேண்டும். – அரிஸ்டாட்டில்.

(4) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.
வெற்றி என்பது இறுதியானதல்ல ; தோல்வியானது விதியால் ஏற்படுவதல்ல ; அது தொடர்ந்து பயணப்படத் துணிவைத் தருவது ஆகும். – வின்ஸ்டன் சர்ச்சில்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

1. **விண்ணப்பப் படிவத்தை நிரப்புக**

**மேல்நிலைப் பள்ளி – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : 5678 தேதி : 10.01.2022 வகுப்பும் பிரிவும் :11-ஆம் வகுப்பு, 'அ' பிரிவு

1. மாணவ / மாணவியின் பெயர் : அருண். வி
2. பிறந்த தேதி : 12.02.2005
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : வினோத்
5. வீட்டு முகவரி : 10, பாரதி நகர், குறுக்கு சாலை, தேனி
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : 10-ஆம் வகுப்பு
7. பயின்ற மொழி : ஆங்கிலம்
8. பெற்ற மதிப்பெண்கள் : 450
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி

| **தேர்வின் பெயர்** | **பதிவு எண் - ஆண்டு** | **பாடம்** | **மதிப்பெண் (100)** |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு | 3456786 – 2020-2021 | தமிழ் | 90 |
| | | ஆங்கிலம் | 90 |
| | | கணிதம் | 90 |
| | | அறிவியல் | 90 |
| | | சமூக அறிவியல் | 90 |
| | | மொத்தம் | 450 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் : கணிதம், ஆங்கிலம்

**மாணவ / மாணவியின் கையெழுத்து**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

2. படிவத்தை நிரப்புக.

**நூலக உறுப்பினர் படிவம்**

**<u>திருச்சி</u> மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் **<u>மைய</u>**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : 34 உறுப்பினர் எண் : 7896

1. பெயர் : எழிலன்
2. தந்தை பெயர் : கதிர்
3. பிறந்த தேதி : 13.01.2006
4. வயது : 16
5. படிப்பு : 10-ஆம் வகுப்பு
6. தொலைபேசி எண் : 9865740288
7. முகவரி : 45, கம்பன் தெரு, திருச்சி – 620 030
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் **<u>திருச்சி மாவட்ட மைய</u>** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. **<u>100</u>** சந்தா தொகை ரூ. **<u>200</u>** ஆக மொத்தம் ரூ. **<u>300</u>** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : திருச்சி

நாள் : 25.01.2021

தங்கள் உண்மையுள்ள



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

### 3. விண்ணப்பப் படிவத்தை நிரப்புக

**பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புதல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | முகிலன் |
| 2. பாலினம் | : | ஆண் |
| 3. பிறந்த தேதி | : | 30.08.2000 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | இனியன் |
| 6. வீட்டு முகவரி | : | 78, பாரதியார் சாலை, கோட்டை, வேலூர் |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | 9865740288 |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 450 |
| 9. பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| 10. தாய்மொழி | : | தமிழ் |
| 11. தட்டச்சு | : | ஆம் |
| 12. கணினி | : | ஆம் |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் **<u>தட்டச்சர்</u>** பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

**இப்படிக்கு,**
**தங்கள் உண்மையுள்ள**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**4. படிவத்தை நிரப்புக.**

**விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினர் படிவம்**

**மதுரை மாவட்ட ஆணைக்குழு சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1. மாணவரின் பெயர் | : | அகிலன் |
| 2. பாலினம் | : | ஆண் |
| 3. பிறந்த தேதி | : | 12.11.2005 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. இரத்த வகை | : | O+ |
| 6. உயரம் மற்றும் எடை | : | 172 செ.மீ., 65 கிலோ |
| 7. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | குப்புசாமி |
| 8. முகவரி | : | 712, கம்பன் தெரு, மதுரை |
| 9. தொலைபேசி எண் | : | 9567894567 |
| 10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | 9 – ஆம் வகுப்பு |
| 11. பள்ளியின் முகவரி | : | அரசு மேல்நிலைப் பள்ளி |
| 12. சேர விரும்பும் விளையாட்டு | : | கால்பந்து |
| 13. சேர்க்கை எண் | : | 75660 |

தேதி : 12.11.2022

இடம் : மதுரை

**பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்** **மாணவரின் கையொப்பம்**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**காட்சியை கண்டு கவினுற எழுதுக**
**(அனைத்துப் படங்களுக்கும் உரியது)**

சின்னச் சின்ன ஓவியம் !
சிங்காரமான ஓவியம் !
வண்ண வண்ண ஓவியம் !
வளமான ஓவியம் !
சொல்லச் சொல்லும் காவியம் !
சொற்குவியலான ஓவியம் !
சிந்தனைக்கு ஓவியம் !
சிறப்பான ஓவியம் !

***********

## 8 மதிப்பெண் வினாக்கள் மற்றும் விடைகள்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

8. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

**தமிழின் சொல்வளம் :**

- தாவரத்தின் பகுதிகளைக் குறிப்பதற்கே தமிழில் கீழ்க்கண்ட சொல்வளங்கள் உள்ளன.

**அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் :**

- தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி

**கிளைப் பிரிவுகள் :**

- கவை, கொம்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு

**காய்ந்த அடியும், கிளையும் :**

- சுல்லி, இறகு, வெங்கழி, கட்டை

**இலை வகை :**

- இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு

**கொழுந்து வகை :**

- துளிர், முறி, கொழுந்து, குருத்து, கொழுந்தாடை

**பூவின் நிலை :**

- அரும்பு, போது, மலர், வீ, செம்மல்

**பிஞ்சு வகை :**

- பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, கச்சல்

**கெட்டுப்போன காய்கனி வகை :**

- சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

www.Padasalai.Net www.CBSEtips.in

**இளம்பயிர் வகை :**

- நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி, வடலி, பைங்கூழ்

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை :**

- மொழியின் வளர்ச்சிக்கு, புதிய கருத்துக்களை உணர்த்த, பிறமொழிச் சொற்களை மொழி பெயர்க்க தேவைப்படுகிறது.

9. குமரிக் கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும், எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்கை மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

- இக்கருத்தைக் கருவாகக் கொண்டு ‘சான்றோர் வளர்த்த தமிழ்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குமரிக் கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்டது தமிழ்.

**தமிழன்னை :**

- தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைாசல் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழ்கிறார் அவ்வன்னை.

**இலக்கியங்கள் :**

- செந்நாப்புலவர்கள் பிள்ளைத்தமிழ் பேசி. சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து அணியாகப்பூட்டி அழகினைக் கூட்டி அகம் மிக மகிழ்ந்தனர். மேல் கணக்கும் கீழ்க்கணக்கும் படைத்தளித்தனர்.

**சான்றோர்கள் :**

- கபிலர், கம்பர்
- ஔவையார், பாரதியார்
- வள்ளுவர், சுந்தரர்
- கண்ணதாசன், பாரதிதாசன்
- மீரா, மேத்தா – சான்றோர்களால் தமிழ் சிறந்தது.
- தமிழ் முச்சங்கம் கண்டது. முத்தமிழால் வளர்ந்தது. வாழ்க தமிழ்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

10. புயலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலிலே தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

புயலே ஒரு தோணி ப. சிங்காரம்

**முன்னுரை :**

- ஆசிரியரின் நேரடி அனுபவம் மற்றும்
- கற்பனை கலந்த கதை
- இக்கதையில் தோணி படும்பாட்டைப் பற்றி பார்ப்போம்.

**வருணனைகள் :**

- கொளுத்தும் வெயில் இமை நேரத்தில் மறைந்துவிடும்.
- மேகப்பொதிகள் திரண்டன.
- கும்மிருட்டு
- மின்னல் கீற்றுகள் வானைப்பிளந்தன.
- கடல் வெறிக் கூத்தாடுகிறது.

**அடுக்குத்தொடர்கள் :**

- வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது.
- தோணி தாவித்தாவிக் குதித்தது.
- மீன்கள் கூட்டம் கூட்டமாய்த் திரிந்தன.
- கரை ! கரை ! கரை !

**ஒலிக்குறிப்புச் சொற்கள் :**

- இக்கதையில் தோணி நம்பாட்டை ஒலிக்குறிப்புச் சொற்களே அதிகமாய்க் காட்டுகின்றன.
- நொறு நொறு நொறுங்கல் ஒலி
- நடுநடுங்கி
- குருட்டிருட்டு
- சிறுசிறு
- மரமரப்பு
- நொய்ங் புய்ங்

**முடிவுரை :**

- இக்கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்பு சொற்களும் புயலில் தோணிப்படும் பாட்டை அழகாய் காட்டுகின்றது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

11. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

கோபல்லபுரத்து மக்கள் (கி. ராஜ நாராயணன்)

**முன்னுரை :**
- கிராமத்து மக்கள் பகிர்ந்து உண்பவர்கள்.
- நேசம் மிகுந்தவர்கள்.
- கிராமத்து விருந்தோம்பலைப் பற்றி நாம் இக்கதை மூலம் பார்க்கலாம்.

**புளியமரத்தடியில் வாலிபன் :**
- ரோட்டோரம் இருந்த சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்தனர்.
- கஞ்சிகுடிக்க உட்காரும் பொழுது புளியமரத்தடியில் பசியால் வாடிய வாலிபன் இருந்தான்.

**அன்னமய்யாவின் விசாரிப்பு :**
- அன்னமய்யாவைப் பார்த்து அவ்வாலிபன் மென்மையாக சிரித்தான்.
- குடிக்க தண்ணீர் கேட்டான்.
- அன்னமய்யா நீச்சுத் தண்ணியைக் கொடுத்தான்.

**அன்னமிட்ட அன்னமய்யா :**
- வேப்ப மரத்தின் அடியில் இருந்த கஞ்சி கலயத்தையும், மோர் மிளகாயும் கொடுத்தான்.
- அடுத்த புஞ்சைக்கு அழைத்துச் சென்றான்.
- வட்டமாக உட்கார்ந்து கம்மஞ்சோறு உண்டனர்.

**பெயர்ப் பொருத்தம் :**
- வாலிபனுக்கு அன்னமளித்தவன் பெயர் அன்னமய்யா.
- பெயர் சரியாகப் பொருந்துகிறது.
- ஒரு மனிதனின் பெயரே அவன் குணத்தை மிகுதியாக வெளிப்படுகிறது என்பதை இக்கதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை :**
- ஒரு மனிதன் பெயரே அவன் குணத்தை மிகுதியாக வெளிப்படுத்துகிறது என்பதை இக்கதை நமக்கு உணர்த்துகிறது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

12. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

தமிழரின் சிறந்த பண்பு விருந்தோம்பல்

- நானும் அதைக் கடைபிடித்தேன்.
- என் மாமா ஒருநாள் வீட்டிற்கு வந்தார்.
- அவரை எனக்கு மிகவும் பிடிக்கும்.
- முதலில் குடிக்க நீர் கொடுத்தேன்.
- நலம் விசாரித்தேன்.
- வாழை இலையில் விருந்து அளித்தேன்.
- அதிகநேரம் பேசி மகிழ்ந்தேன்.
- அவர் விடைபெற்றார்.
- நான் வாசல்வரை சென்று வழி அனுப்பிவைத்தேன்.
- அந்த இனிய நிகழ்வு என் மனதை விட்டு அகலவில்லை.

13. ‘கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே’ என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

**முன்னுரை :**

- மேரியிடமிருந்து பரிக்கப்பட்ட புத்தகம் அவளின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றியது. அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பருத்திக்காட்டில் மேரி :**

- மேரி கருப்பர் இனத்தை சார்ந்தவள்.
- மிகவும் வித்தியாசமான பெண்.
- பருத்திச் செடிகளை மிகவும் கவனமாய் பார்த்துக்கொள்வாள்.
- அதில் பூக்கும் பூவை பார்க்கிற முதல் ஆளாக இருப்பாள்.

**வெள்ளைக்கார சிறுமியின் செயல் :**

- வெள்ளைக்கார சிறுமி விளையாடும் இடத்திற்கு சென்றாள்.
- வீட்டிற்குள் சென்ற சிறுமி அங்கிருந்த புத்தகத்தை எடுத்தாள்.
- வெள்ளைச் சிறுமி என்னிடம் கொடு உன்னால் படிக்க முடியாது என்று புத்தகத்தைப் பிடுங்கினாள்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**மேரியின் வருத்தம் :**

- வெள்ளைச் சிறுமி கூறியதை கேட்ட மேரி தனக்கு படிக்கத் தெரியவில்லையே என்று வருத்தம் அடைந்தாள்.

**தணியாத தாகம் :**

- படிக்கவேண்டுமென்ற தாகம் அவளின் உள்ளத்தில் எழுகிறது.
- தன் தந்தையிடம் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்று கூறுகிறாள்.

**வாய்ப்பு வந்தது :**

- மிஸ் வில்ஸன் மேரியைப் பார்த்து வேலையை விரைவாக முடித்துவிட்டு படிக்கவா என்றார்.
- மேரி படிக்கத் தொடங்கினாள்.

**புதிய நம்பிக்கை :**

- மேரி புதிது புதிதாக கற்றாள் தன் வாழ்க்கை உயர்வதை உணர்ந்தாள்.
- டிப்ளமோ பட்டம் பெற்றாள்.

**முடிவுரை :**

- கருப்பினத்தின் முதல் பட்டதாரிப் பெண் இவள்.
- உனக்கு படிக்கத் தெரியாது என்ற வசைமொழியால் சாதித்தாள்.
- வெற்றி பெற்றாள்.
- சாதனைப் பெண்ணாக.

14. அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர்கள் குறித்து எழுதுக.

**முன்னுரை :**

- அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பன். அவரைப் பற்றி இங்குக் காண்போம்.

**வீரப்பன் :**

- வீரப்பன் ஒரு கட்டிடத் தொழிலாளி.
- மிகவும் ஏழை.
- வீரப்பனின் நண்பன் குப்புசாமி.
- ஆனாதையான குப்புசாமிக்கு வறுமையிலும் உதவுகிறார் வீரப்பன்.
- குப்புசாமிக்கு கடுமையான வயிற்றுவலி வேலைக்கு போக முடியவில்லை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

- வீரப்பன் கடன் வாங்கி குப்புசாமிக்கு உதவுகிறார்.
- வைத்தியம் பார்ப்பதற்காக குப்புசாமி சென்னையில் தன் சித்தி வீட்டிற்குச் செல்கிறான்.
- குப்புசாமி விரைவில் குணமாக வேண்டும் என்று வீரப்பன் தினமும் கோவிலுக்குச் சென்று வேண்டுகிறார்.
- சென்னை செல்லும் ஆறுமுகத்திடம் மூன்று ரூபாயும், ஒரு கடிதமும் கொடுத்து அனுப்புகிறார்.
- அந்த கடிதத்தில் உன் நினைவாகவே உள்ளது. உன்னை நேரில் பார்க்க ஆசை ஆனால் நேரில் வந்தால் இந்த மூன்று ரூபாயும் பேருந்துக்கு செலவாகிவிடும். பணம் கிடைத்தால் உன்னை பார்க்க வருகின்றேன் என்று எழுதியிருந்தார்.

**முடிவுரை :**

- வறுமையிலும் செம்மையாக வாழும் வீரப்பன் நம் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறார்.

15. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

அமுதன் வார இதழ்

வெளியீடு : 11.11.2023

விலை ரூ. 80

**உள்ளே :**

- எதற்காக எழுதுகிறேன்.
- கடந்து வந்த பாதை.
- படைப்புகள்
- விருதுகள்
- இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்

ஜெயகாந்தன்
நினைவு சிறப்பிதழ்

முன் பதிவிற்கு
அமுதன் வார இதழ்
10, பாரதி நகர்,
திருப்பூர் - 641684
9843586570

உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

16. நிகழ்கால வடிவங்கள் -- அவை நிகழும் இடங்கள் -- அவற்றின் ஒப்பனைகள் -- சிறப்பும் பழமையும் -- இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் -- அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன -- இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

**முன்னுரை :**

- மனதிற்கு இன்பம் தருவன நிகழ்கலைகள்.

**நிகழ்கலை வடிவங்கள் :**

- ஆடல்கள், பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவை.

**நிகழும் இடங்கள் :**

- தெரு, தெருக்கோடி, முற்சந்தி போன்றவை.

**ஒப்பனைகள் :**

- ஆடை அணிகலன்கள் முக்கிய இடம் பெறும்.

**சிறப்பும் பழமையும் :**

- அனைவராலும் விரும்பப்படும் கலை வாழ்வில் பிரிக்க முடியாத பண்பாட்டு கூறாகும்.

**அருகுதல் :**

- தொழில்நுட்ப வளர்ச்சி, திரைப்படம், தொடர் நாடகம் முக்கிய காரணமாகும்.

**மீள வழிகள் :**

- கலைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**முடிவுரை :**

- ஊடகம் உதவி செய்தால் நிகழ்கலை தலைநிமிரும்.
- பண்பாட்டை உலகறியும்.

17. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

**முன்னுரை :**

- நான் கோடை விடுமுறையில் அரசு பொருட்காட்சிக்கு சென்றேன். அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**அரங்குகள் :**

- காவல் துறை
- சுற்றுலாத் துறை
- பொதுப்பணித் துரை
- வனத் துறை
- மின் துறை
- அறிவியல் துறை
- என பலத் துறை சார்ந்த அரங்குகள் இருந்தன.
- அதில் நான் பல வினாக்களைக் கேட்டேன்.

**கேளிக்கை அரங்குகள் :**

- ஊஞ்சல்
- இராட்டினம்
- இராட்சத இராட்டினம்
- போன்ற விளையாட்டுகளை விளையாடினேன்.

**அங்காடிகள் :**

- விளையாட்டு சாதனப் பொருட்கள்
- அழகு சாதனைப் பொருட்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- என பல அங்காடிகள் இருந்தன.

**உணவு அரங்கம் :**

- ஐஸ்கிரீம் கடை
- உணவகம்
- இனிப்பகம்
- அப்பளக் கடை
- ஆகியவை இருந்தன.

**முடிவுரை :**

- பொருட்காட்சிக்கு சென்றுவந்த நிகழ்வு இனிமையாக இருந்தது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பத்தாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் இந்த கையேட்டை நன்முறையில் பயன்படுத்தி பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



கற்பதற்கு வயது தடையில்லை.

கல்வி ஒன்றே அழியாச் செல்வம்.

கற்கையில் கசப்பு கற்ற பின் இனிப்பு.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com